Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை ரூபா 7.00

பொதுசன நூலகம்
7 MAR 2005

DREAM SOLUTIONS PVT LTD
The Solutions People
நிலவு.com வெளியீடுகள்
The King Of Multimedia

சுயகற்றலுக்கான தமிழில்
பல்லூடக குறுவட்டுக்கள்

| | | |
|---|---|---|
| Ms-Word-xp | Pagemaker | Java |
| Ms-Excel-xp | PhotoShop | TCP/IP |
| PowerPoint-xp | CorelDraw | SQL |
| Ms-Access-xp | Macromedia Flash | Thirukkural |
| Ms-FrontPage-xp | Computer Hardware | Thamizha |
| Ms-Visual Basic | 3D-Studio Max. | இன்னும் பல... |

275, யாழ்வீதி, மானிப்பாய். தொ.இல.0777 740413

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 மாசி – 23 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 முஹர்ரம் 25 (07.03.2005) திங்கட்கிழமை இதழ்: 158

## ஆயுதக் குழுவின் தாக்குதலில் வெலிக்கந்தவில் ஆறுபேர் பலி!

(பொலனறுவ)

பொலனறுவ மாவட்டத்திலுள்ள வெலிக்கந்த பகுதியில் ஆயுதக்குழுவினரின் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் ஒருவர் மற்றும் நான்கு முஸ்லிம்கள், ஒரு சிங்களவர் என ஆறு பேர் பலியானதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 8.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவ தாவது –

வெலிக்கந்த – செவனப்பிட்டியவுக்கு அருகிலுள்ள கொலகுணாவெளி என்ற இடத்தில் பத்துப் பேர் கொண்ட ஆயுதக் குழுவினர் இரண்டு வீடுகள் மீது நடத்திய தாக்குதலிலேயே இவர்கள் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தின்போது கொல்லப்பட்ட முஸ்லிம்கள் – அம்பாறை மாவட்டம் –அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவர்கள் மொஹமட் உசைன், அப்துல் ஜவ்பார், மொஹமட் ஹனிபா, சாருத்தம்பி ஜெஸ்மா என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மொஹமட் உசைன் என்ற விவசாயியின் வீட்டில் தங்கியிருந்தபோது – இவர்கள் மீது ஆயுதக்குழுவினர் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் உசைனின் மனைவியும் காயமடைந்தார்.

மற்றொரு வீட்டில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட தமிழரான அர்ஜுன் செல்வராசா வாழைச்சேனையைச் (12 ஆம் பக்கம் பார்க்க)

## செக். குடியரசு தயாரிப்பு விமானமே விடுதலைப் புலிகளிடம் உள்ளது!

### அமெரிக்கா உறுதி செய்ததாம்

(கொழும்பு)

செக்குடியரசில் தயாரிக்கப்பட்ட நான்கு இருக்கைகளைக் கொண்ட Zlin z 143 L ரகத்தைச் சேர்ந்த விமானங்களில் ஒன்றே விடுதலைப் புலிகளிடம் உள்ளதாக அமெரிக்கா இலங்கை அரசாங்கத்துக்குத் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் இஸ்ரேலிய தயாரிப்பான ஆளில்லா வேவு விமானம் விடுதலைப் புலிகளின்

(12 ஆம் பக்கம் பார்க்க)



புலிகளிடம் உள்ளதாகக் கூறப்படும் Zlin z 143 L ரக விமானம்.

# இராணுவ வன்முறைகள் குறித்து தீர்க்கமான முடிவை எடுக்கும் காலகட்டம் நெருங்கி வருகிறது!

## அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

தமிழ் மக்கள் மீதான – போராளிகள் மீதான இராணுவ வன்முறைகளைத் தொடர்ந்தும் பொறுமையுடன் பார்த்துக்கொண்டிருக்கமுடியாது. இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக தமிழ்மக்கள் கொந்தளிக்கும் நிலைக்கு வந்துவிட்டார்கள்.

எனவே, இந்த நிலைமை குறித்து விடுதலைப்

மிக விரைவில் எடுப்பதற்கான காலகட்டம் உருவாகி வருவதாக தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

கொழும்பு செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தனது பேட்டியில் மேலும் கூறியிருப்பதாவது –

தமிழ்மக்கள் மற்றும் போராளிகள் மீது வன்முறை

தலைப் புலிகள் சகித்துக்கொண்டிருக்கமாட்டார்கள். ஒரு விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்து, மக்களின் அங்கீகாரத்தைப் பெற்று, தேசிய அமைப்பாக மாறி, பலம்கொண்ட படைக் கட்டுமானங்களைக் கொண்டு, சுமார் 70 வீதமான நிலப்பரப்புக்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து எமது விடுதலைப் போராட்டம் ஒரு உன்னத நிலையில் உள்ளது.

# அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

தமிழ் மக்கள் மீதான – போராளிகள் மீதான இராணுவ வன்முறைகளைத் தொடர்ந்தும் பொறுமையுடன் பார்த்துக்கொண்டிருக்கமுடியாது. இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக தமிழ்மக்கள் கொந்தளிக்கும் நிலைக்கு வந்துவிட்டார்கள்.

எனவே, இந்த நிலைமை குறித்து விடுதலைப் புலிகளின் தலைமை தீர்க்கமான முடிவொன்றை மிக விரைவில் எடுப்பதற்கான காலகட்டம் உருவாகி வருவதாக தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

கொழும்பு செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தனது பேட்டியில் மேலும் கூறியிருப்பதாவது –

தமிழ்மக்கள் மற்றும் போராளிகள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிடும் செயற்பாடுகளை விடுதலைப் புலிகள் சகித்துக்கொண்டிருக்கமாட்டார்கள். ஒரு விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்து, மக்களின் அங்கீகாரத்தைப் பெற்று, தேசிய அமைப்பாக மாறி, பலம்கொண்ட படைக் கட்டுமானங்களைக் கொண்டு, சுமார் 70 வீதமான நிலப்பரப்புக்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து எமது விடுதலைப் போராட்டம் ஒரு உன்னத நிலையில் உள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலை சோதனைச்சாவடி இரவு 10 மணிவரை திறக்கும்!

(யாழ்ப்பாணம்)

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு இன்று முதல் எதிர்வரும் புதன்கிழமை வரை ஏ–9 வீதியில் முகமாலை இராணுவ சோதனைச்சாவடி இரவு 10 மணிவரை திறந்திருக்கும் என யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

சிவராத்திரியை முன்னிட்டு இந்த மூன்று நாட்களும் பிற்பகல் 5 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை முகமாலை சோதனைச்சாவடி ஊடாக பக்தர்கள் மட்டுமே பயணம் செய்ய முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## படுகொலை விசாரணைக்கு மூன்று நீதிபதிகள் நியமனம்!

(கொழும்பு)

மிருசுவிலில் கடந்த 2000 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதி எட்டு பொதுமக்கள் – இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு மூன்று நீதிபதிகள் கொண்ட குழுவொன்றை பிரதம நீதியரசர் சரத் என் சில்வா நியமித்துள்ளார்.

இந்த நீதிபதிகள் குழுவின் விசாரணைகள் எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்.குடாநாட்டில் இன்று துக்கதினம்; தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைப்பு!

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் கொலைகள் மற்றும் அத்துமீறல்களை கண்டிக்கும் வகையில் இன்றைய நாளை துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது –

கடந்த வெள்ளிக்கிழமை படையினரின் வாகனத்தால் மோதுண்ட பாடசாலை மாணவியின் உயிரிழப்பைத் தொடர்ந்து ஆத்திரமடைந்த மக்கள், படையினருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டபோது, அவர்கள் மீது சட்டத்துக்கு முரணான வகையில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு, அப்பாவிப் பொதுமகன் ஒருவரை கொலைசெய்து, இருவரைக் காயப்படுத்தியதுடன் மேலும் பலரை குண்டாந்தடியடிப் பிரயோகம் செய்தும் காயப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு படையினரின் வாகனங்களால் மோதப்பட்டு மக்கள் கொல்லப்படுவதும், அதற்கெதிராக போராட்டம் நடத்தும் மக்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படுவதும் தொடர்கதையாகவே உள்ளது.

மூன்று வருடங்களின் முன்னர் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டபோது – அந்த உடன்படிக்கையை படையினரோ அல்லது அரசோ மதித்து நடைமுறைப்படுத்தியிருந்தால், மக்கள் குடியிருப்புக்களில் இருந்த இராணுவத்தினர் வெளியேறியிருப்பார்கள். மக்கள் குடியிருப்புக்களை அண்டிய பிரதேசங்களில் படையினரின் நடமாட்டமோ, படை வாகனங்களின் நடமாட்டமோ இருந்திருக்காது.

ஆனால், அரசு ஒப்பந்தத்தை மதித்து அதனை சரி யான முறையில் நடைமுறைப் படுத்தத் தவறியமையால், இன்று சிறிதளவு நிலப்பரப்பினுள் 40 ஆயிரத்துக்கும் அதிகமான படை யினரும் அவர்களுக்குச் சொந்தமான பல ஆயிரக்கணக்கான பாவனைக்கு தவாத இராணுவ வாகனங்களினதும் நடமாட்டம் அதிகமாகக் காணப்படுவதனாலேயே – அதிகமான விபத்துக்கள் ஏற்படுவதும், குழப்பங்கள் உருவாகுவதும் நடைபெறுகின்றன. (12 ஆம் பக்கம் பார்க்க)

## சண்டைக்கு இழுக்கின்றனர்; புலிகள் குற்றச்சாட்டு!

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலி போராளிகள் மீது தாக்குதலை மேற்கொண்டு, படைத்தரப்பு பகிரங்கமாகவே சண்டைக்கு இழுப்பதாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு – அம்பாறை மாவட்ட அரசியற்துறைப்பொறுப்பாளர் இளந்திரையன் குற்றம் சாட்டியுள்ளார்.

வாகரை, கிரிமிச்சை சம்பவம் தொடர்பாகக் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



சண்டைக்கு இழுக்கிறவைக்கு
என்ர நிலைதான் பாருங்கோ வரப்போகுது...!

# மருத்துவபீட இறுதிவருட மாணவர்கள் இன்றுமுதல் பகிஷ்கரிப்புப் போராட்டம்

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்களின் சத்திரசிகிச்சைக்கான கற்றல் நடவடிக்கைகள் கடந்த மூன்று மாதமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனை மீள ஆரம்பிக்கக் கோரியும் யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்தின் இந்த நிலைமீதான அசமந்தப் போக்கைக் கண்டித்தும் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக மருத்துவபீட மாணவர் ஒன்றியம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

யாழ்.மருத்துவபீட இறுதியாண்டு சத்திரசிகிச்சைப் பிரிவு வைத்திய கலாநிதி அம்பலவாணரின் வெளிநாட்டு பிரயாணத்தைத் தொடர்ந்து வைத்தியசாலையின் பொது சத்திரசிகிச்சை நிபுணர்களால் தற்காலிகமாக பொறுப்பேற்கப்பட்டு கல்வி நடவடிக்கைகள் இடையூன்றி மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிலையில் நரம்பியல் நிபுணரான வைத்திய கலாநிதி வி.குணாநந்தன் அவர்கள் சத்திரசிகிச்சைத் துறைக்கான நிரந்தர சிரேஷ்ட விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். இதன் காரணமாக ஒப்பந்த அடிப்படையில் தொடர்ந்து மேற்கொண்டு வந்த இறுதியாண்டு சத்திரசிகிச்சை நடவடிக்கைகளில் இருந்து யாழ்.போதனா வைத்தியசாலை பொது சத்திரசிகிச்சை நிபுணர்கள் விலகிக்கொண்டனர். இதன் மூலம் இறுதி வருட சத்திரசிகிச்சை நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலைமையினைச் சீராக்கி சத்திரசிகிச்சை கற்பித்தல் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற வழிவகுப்பதாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் மோகனதாஸ் எழுத்து மூலமாக உறுதியளிக்கப்பட்டதை அடுத்து சத்திரசிகிச்சை தவிர்ந்த ஏனைய துறைகளின் கற்பித்தல் நடவடிக்கைகள் இடம்பெற்று வந்தன.

ஆயினும், கடந்த மூன்று மாதகாலம் கழிந்த நிலையிலும் யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தினால் எமது சத்திரசிகிச்சை நடவடிக்கைகள் தொடர்ந்து நடைவெறுவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்ட நிலையில் எமது சகோதர மருத்துவபீடங்களின் சமகால மாணவர்கள இறுதியாண்டு பரீட்சையைமுடித்து வைத்தியர்களாக வெளிவந்துவிட்ட நிலையில் கற்பித்தல் நடவடிக்கைகளில் இக்காலதாமதம் ஏற்றுக்கொள் ளப்படமுடியாதது.

எனவே, தொடரும் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியில் யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்தினரும் பல்கலைக்கழக பேரவையினதும் அசமந்தப் போக்கை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்நிலைமை இறுதியாண்டு மாணவரை மாத்திரமன்றி ஏனைய மாணவரையும் பாதிப்புக்குள்ளாக்குவதால் யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் இப்பிரச்சினையில் துரிதமாக செயற்பட்டு மீண்டும் இறுதி வருடகற்றல் நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்கப்படும்வரை இறுதி வருட சத்திர சிகிச்சை கற்றல் நடவடிக்கைகளை இன்றுமுதல் இடைநிறுத்துவதுடன் அதனை வலியுறுத்தி போராட்டத்தினையும் ஆரம்பிக்கவுள்ளோம். இப்பகிஷ்கரிப்புப் போராட்டம் இறுதி வருட சத்திர சிகிச்சை கற்றல் நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்படும் வரை தொடர்ந்து விஸ்தரிக்கப்படும்.

எனவே, இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் யாழ்.பல்கலைக்கழக நிர்வாகமும் விரைவாகச் செயற்பட்டு இப்பிரச்சனைக்கான தீர்வினைக் காணுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் என அந்தஅறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீதிகள் திருத்தப்பட்டன

(கொக்குவில்)

யாழ்.நகரப் பகுதிகளிலும், புறநகர் பகுதிகளிலும் பல வருடகாலமாக பழுதடைந்து கிடந்த வீதிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் செப்பனிடப்பட்டுள்ளன.

குறிப்பாக யாழ்.தட்டாதெரு சந்தி மற்றும் மானிப்பாய் வீதியில் கொக்குவில் மேற்கு வீதிச் சந்தி, ஆனைக்கோட்டை நாலுகால் மண்டப வைரவர் ஆலயப் பகுதி காக்கைதீவு கடற்கரை வீதி, ஆறுகால்மடம் பொம்மைவெளி வீதிச் சந்தி ஆகியன புதிதாக செப்பனிடப்பட்டுள்ளதால் அவ்வீதி ஊடாகப் பயணிப்பவர்கள் அசௌகரியங்கள் நீங்கி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(206)

## சிவராத்திரி விழா

(கொக்குவில்)

நாகேஸ்வரம், அளவெட்டி தெற்கு சிறீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை சிவராத்திரி விரத பூசை சிறப்பாக நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நாளை நான்கு சாமப் பூசைகள் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறுவதுடன் இடை இடையே பஜனைகள், கதாப்பிரசங்கம் என்பனவும் இடம்பெறவுள்ளன. (206)

## முதியோர்சங்க பொதுக்கூட்டம்

மல்லாகம் மத்தி கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட 60 வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கான பொதுக் கூட்டமொன்று இன்றுகாலை 11 மணிக்கு J/213 கிராம அலுவலர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் நடப்பு வருடத்துக்கான புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெறவுள்ளது. இதில் சமூக சேவை உத்தியோகத்தர் ந.புரட்சிதாஸனும் கிராம அலுவலர் சு.பூபாலசிங்கமும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## மாணவர் ஒன்றியம் இன்று மகஜர் கையளிக்கவுள்ளது

(யாழ்ப்பாணம்)

கடந்த 4ஆம் திகதியன்று யாழ். நகரில் ஏற்பட்ட அசம்பாவிதங்களின்போது, படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததுடன் கஜேந்திரன் எம்.பியின் அலுவலகம், சாவகச்சேரி... 

தேச மாணவர் பேரவை அலுவலகம் சேதமாக்கப்பட்டமை மற்றும் ஊழியர்களை ஆயுதமுனையில் அச்சுறுத்தியமை ஆகியவற்றைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவிடம் இன்று காலை 11.00 மணிக்கு மகஜர் ஒன்றைக் கையளிக்கவுள்ளனர்.



கடந்த செவ்வாய்க்கிழமை (2005.03.01) யா/ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டியின் வினோத உடைப்போட்டியில் பங்குபற்றிய இக்பால் இல்ல மாணவர்களும் குழுவினரையும் படத்தில் காணலாம்.



கடந்த வாரம் யா/ஒஸ்மானியாக் கல்லூரியின் வீதியினை மாணவர்களும் இளைஞர்களும் சிரமதானப் பணியில் ஈடுபட்டு துப்பரவு செய்வதனை படத்தில் காணலாம்.


நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், திரிஷா நடித்த
திருப்பாச்சி
(சி-3860)
கா.நே. 11.00, 3.00, 7.00, 10.00

மனோகரா திரையரங்கு யாழ்ப்பாணம்
இளைய தளபதி விஜய், நதிஷா, ரவிகிருஷ்ணா நடித்த
சு★க்★ர★ன்
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
ஜெயம் ரவி அசின் நதியா பிரகாஷ்ராஜ் நடித்த
M.குமரன் son of மகாலட்சுமி
(சி-3856) (சி-3858)
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது
சிவராத்திரி தினத்தை முன்னிட்டு 07.03.2005 முதல்
விஜய், சங்கவி, சுபலக்ஷ்மி நடித்த
நிலவே வா
கா.நே(பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30 12.00 3.00
பலருடைய பாராட்டுதலையும் பெற்ற இத்திரைப்படம் முதல்முதலாக இலங்கையில் திரையிடப்படுகின்றது.
(சி-3857)

ராஜா யாழ்ப்பாணம்
சிம்பு (இரு வேடம்), ஜோதிகா கவுண்டமணி நடித்த
மன்மதன்
(சி-3859)
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30


# கோண்டாவில் கிழக்கில் கழிவுகள் சுகாதாரக்கேடு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு அரசடிப் பிள்ளையார் ஆலயத்திற்குப் பின்புறமாக புகையிரத நிலைய வீதியில் கழிவுப்பொருட்கள் கொட்டப்படுவதால் சுகாதார சீர்கேடு நிலவுகிறது. இதனால் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கழிவுப்பொருட்களை இந்த வீதியின் குறுக்கே செல்லும் பாலத்தினை இடைமறித்து கொட்டப்படுவதால் வாய்க்கால்வழியே செல்லும் கழிவுநீர் செல்லாது தேங்கிக் கொள்கிறது.

இதனால் கழிவுப்பொருட்கள் அழுகி துர்நாற்றம் வீசுகின்றது. இங்கிருந்து நுளம்புகள் மற்றும் ஏனைய தொற்றுண்ணிகள் காற்றோடு எடுபடுவதால் தொற்றுநோய்கள் பரவக் கூடிய வாய்ப்புக்களும் உண்டு. அத்துடன் இப்பகுதியில் பாதீனிய செடிகளும் படர்ந்து காணப்படுகின்றன.

எனவே அதிகாரிகள் உடனடியாக கழிவுப் பொருட்களை அகற்றி சீரமைக்குமாறு அப்பகுதிமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதே வீதியில் இதற்கு அண்மையாக அரசினர் வைத்தியசாலை ஒன்றும் ஆரம்பப்பாடசாலை ஒன்றும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (82)

# பதுளையில் பரவும் நோய் ஊடகங்கள் தவறான தகவல்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

பதுளையில் பரவிவரும் இருதய நோய் தொடர்பாக தவறான தகவல்களை வெளியிடும் ஊடகங்களுக்கும் மற்றும் அரசியல் வாதிகளுக்கெதிராகவும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா எச்சரித்துள்ளார்.

கொழும்பில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இந்த எச்சரிக்கையை விடுத்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது –

இருதயநோய் தொடர்பான பொய்யான தகவல்களை ஊடகங்களுக்கு வழங்குபவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இருதய நோய் தொடர்பாக எமது நாட்டு ஊடகங்கள் பெரிதாக செய்திகளை வெளியிடுகின்றன. ஆனால் பிறநாடுகளில் இது தொடர்பான விடயங்களில் ஊடகங்கள் நடுநிலையாக நடக்கின்றன. ஆனால் நாம் இந்த முறையைப் பின்பற்றுவதில்லை.

அத்துடன் இருதயநோய் காரணமாக ஆறுபேர் உயிரிழந்துள்ளதாக செய்திகள் தெரிவித்தன. ஆனால் ஒரு மரணம் கூட சம்பவித்தது தொடர்பான தகவல் இதுவரை கிடைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# வயல் வரம்புகளை வெட்டி மண் எடுக்கும் விசமிகள்

நாயன்மார் கட்டு பிரதேசத்தின் தாழங்காட்டுப் பகுதியில் உள்ள வயல் வரம்புகளை வெட்டி அதிலுள்ள மண்ணை உழவு இயந்திரங்கள் மூலம் கடத்தும் விஷமிகளால் வயல் உரிமையாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

இப்பகுதியில் கடந்த வருடம் நியாப் திட்டத்தின் கீழ் குளம், குளக்கட்டு என்பன புனரமைக்கப்பட்டிருந்தது. இக்குளக்கட்டு வயல் வரம்புகள் என்பவற்றின் மண்ணை இரவு வேளைகளில் விஷமிகள் உழவு இயந்திரங்கள் மூலம் கடத்திச்சென்று கூடிய விலைக்கு விற்பனை செய்கிறார்கள்.

இதனால் எதிர்காலத்தில் குளம் மற்றும் வயல்களில் நீர் தேங்கி நிற்காத நிலைமை ஏற்பட்டு இப்பகுதிகளில் விவசாயம் செய்ய முடியாமல் போகும் என இப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்தனர். இதுபற்றி உரிய அதிகாரிகளிடம் முறையிட்டும் இதுவரை எவ்வித பலனும் ஏற்படவில்லை.

இதேவேளை கட்டடத்துக்கு உகந்ததல்லாத இம்மண்ணை விற்பனை செய்வதால் இவற்றைப் பாவித்துக் கட்ட ப்படும் கட்டங்கள் காலப்போக்கில் உறுதியற்ற தன்மை ஏற்படும் அபாயமும் ஏற்படுவதால் இவற்றை கொள்வனவு செய்யும் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டு மெனவும் கேட்கப்பட்டுள்ளது. (55)

# ஊர்காவற்றுறை சென் அன்ரனீஸ் வீதி மக்கள் பாவனைக்காக திறக்கப்பட்டது

(ஊர்காவற்றுறை)

கடந்த ஒன்பது வருடங்களாக மக்கள் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டு மூடப்பட்டிருந்த ஊர் காவற்துறை சென்.அன்ரனீஸ் வீதி மக்கள் பாவனைக்காக நேற்றுமுனதினம் திறக்கப்பட்டுள்ளது. இந்த வீதி இதுவரை காலமும் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் இருந்தமையாலேயே மூடப்பட்டிருந்தது.

ஊர்காவற்துறை சென்.அன்ரனீஸ் சனசமூக நிலையத்தினர் இந்த வீதியை திறக்கக்கோரி ஊர்காவற்துறை உதவி அரச அதிபருக்கு தொடர்ச்சியாக கொடுத்து வந்த அழுத்தத்தின் காரணமாகவே நேற்றுமுன்தினம் அவ்வீதி ஊர்காவற்துறை பொலிஸ் அத்தியட்சகரின் உதவியுடன் சம்பிரதாயபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

## மகளிர் தின விழா

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி சமூகக் கல்வி மன்றத்தினால் நடத்தப்படும் மகளிர் தின விழா நாளை மறுதினம் பி.ப. 1 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

சமூகக்கல்வி மன்றத் தலைவர் ம.நிலக்சன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கல்லூரியின் பழைய மாணவியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி செல்வஜோதி செல்லத்துரையும், சிறப்பு விருந்தினராகக் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியை யோ.புண்ணியமூர்த்தியும் கலந்துகொள்வர். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## விபத்தில் படுகாயம்

(பருத்தித்துறை)

கடந்த வெள்ளிக் கிழமை இரவு 8 மணியளவில் வரணிப்பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளும், சைக்கிளும் நேருக்குநேர் மோதிக் கொண்ட சம்பவத்தில் சைக்கிளில் வந்த வேலாயுதம் (வயது – 53) என்பவரே படுகாயமடைந்தார்.

இவர் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் பயணஞ் செய்த ஜெயசீலன் என்பவர் சிறுகாயங்களுக்குள்ளானார். (14)

# உதவிப் பொருட்களுக்குத் தீர்வை; வெளிநாடுகள் அதிருப்தி!

(கொழும்பு)

இலங்கையில் செயற்படும் வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட சுனாமி உதவிப் பொருட்களுக்கு, வரி விதிக்கப்படுவதற்கு எதிராக வெளிநாட்டு அரசாங்கத் தலைவர்கள் பலர், இலங்கை அரசாங்கத்திடம் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளதாக நிதியமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த வெளிநாட்டு நிறுவன பிரதிநிதிகள் தமது நாட்டின் தலைவர்களுக்குச் செய்த முறைப்பாடுகளுக்கு அமைய, இலங்கை அரசாங்கத்துக்கு அந்த நாட்டின் தலைவர்கள் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டுத் தலைவர்களின் அதிருப்தியை அடுத்து, நிவாரணப் பொருட்களுடன் வந்த 160 கொள்கலன்களை உடனடியாகத் தீர்வை வரியின்றி அனுமதிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா நிதியமைச்சுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு அத்தியாவசியமற்ற நிவாரணப் பொருட்களுக்கான அரசின் வரித்தீர்வைச் சலுகை – கடந்த பெப்ரவரி 3 ஆம் திகதி இடைநிறுத்தப்பட்டது. ஆனால் வெளி நாட்டுத் தலைவர்கள் இலங்கை அரசுக்குக் கொடுத்த அழுத்தம் காரணமாக பொதுத்திறைசேரி மூலம் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை இரத்துச் செய்வதற்கு, நிதியமைச்சின் செயலாளர் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

இதன்படி இலங்கைக்கு நிவாரணங்கள் மீதான தீர்வைவரி உதவியை எதிர்வரும் ஏப்ரல் 26 ஆம் திகதிவரை நீடிக்க அரசு முடிவு செய்துள்ளது.

இதில் அரிசி தவிர்ந்த மற்றைய சகல நிவாரணப் பொருட்களுக்கும் தீர்வைவரி உதவியை வழங்குவதற்குத் தேவையான ஆலோசனைகள், அரச நிதி திட்டமிடல் திணைக்களத்தின் ஊடாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக சேவைகள் திணைக்களத்தின் கண்காணிப்பின்கீழ் நிவாரணங்களை வழங்குவதற்கு முன்பு எடுத்திருந்த தீர்மானத்தையும், மாற்ற அரசு தீர்மானித்துள்ளது(தே)

# ஐநூறு மேஜர்தர படை அதிகாரிகள் சேவையிலிருந்து விலகத்திட்டம்!

இலங்கை இராணுவத்தில் சேவையிலுள்ள மேஜர் தர அதிகாரிகளில் ஐநூறுக்கும் மேற்பட்டவர்கள் விரக்தியடைந்த நிலையில் படையிலிருந்து விலகிச் செல்வதற்குத் தயாராக இருப்பதாகக் கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்களப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தப் பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

கடந்த பத்து வருடங்களுக்கு மேலான காலப்பகுதியில் இந்த அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு கிடைக்கவில்லை. ஆனால் இவர்களுடன் கடற்படை மற்றும் விமானப் படைக்குச் சேர்க்கப்பட்டவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சுக்கும், இராணுவத்துக்கும் இடையில் கயிறிழுப்பு நடைபெறுவதனால், இராணுவத்தில் பாரிய சிக்கல்கள் தோன்றியுள்ளன. இதற்குக் காரணம் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக போர்க்கள அனுபவமுள்ள மேஜர் தரத்திலுள்ள சிரேஷ்ட அதிகாரிகள் 531 பேர் தொடர்பானதாகும்.

இவர்களுக்கு உரிய காலத்தில் பதவி உயர்வுகள் மற்றும் சலுகைகள் கிடைக்கவில்லை. எனவே இவர்களில் பெருமளவானோர் இராணுவத்திலிருந்து பதவி விலகத் திட்டமிட்டுள்ளனர். இந்த மேஜர் தர அதிகாரிகள்– முதலாம், இரண்டாம், மூன்றாம் கட்ட ஈழப்போர்களில் பல அனுபவங்களைப் பெற்ற உத்தியோகத்தர்களாவர்.

ஈழயுத்தத்தில் பிளட்டூன் கொமாண்டர் மற்றும் கொம்பனி கொமாண்டர் என இவர்கள் செயற்பட்டுள்ளனர். இந்த அதிகாரிகள் குறித்துத் தீர்மானம் எடுப்பதற்குக் காலம் தோன்றியிருந்தும், சிரேஷ்ட அதிகாரிகளின் இழுபறி நிலையால், அது வருடக்கணக்காக எந்தவித செயற்பாடுமில்லாமல் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாகவும் அந்தப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தே)

## ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்குமாறு
# சுதந்திரக்கட்சி முக்கியஸ்தர்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள்!

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி மற்றும் தற்போதைய விகிதாசாரத் தேர்தல்முறை ஆகியவற்றை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகளில் இறங்குமாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஜனாதிபதி மாளிகையில்நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்டமட்டத் தலைவர்களுடனான கூட்டத்திலேயே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப் பட்டது.

அமைச்சர்களான மங்கள சமரவீர, அனுரா பண்டாரநாயக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா உள்ளிட்ட முக்கியஸ்தர்களே இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான உட்கட்சிப் பூசல் குறித்து முக்கியமாக விவாதிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. (01)

# பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவது நோர்வே அரசின் சதி முயற்சியாம்!

## ஆனந்த சங்கரி தெரிவிப்பு



சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு – கிழக்குப் பகுதிகளை மீளக்கட்டியெழுப்பும் வகையில் அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அமைக்கப்படவுள்ள பொதுக்கட்டமைப்புக்கு தான் எதிர்ப்புத் தெரிவிப்பதாக, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

இந்தக் கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆனந்தசங்கரி திவயின நாளிதழுக்கு வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது –

இந்தப் பொதுக்கட்டமைப்பை நோர்வே ஏற்படுத்த முனைவது ஒரு சதி நடவடிக்கையாகும். எனவே இந்த சதிக்கு உடன்பட்டு கட்டமைப்பைக் கட்டியெழுப்புவதன் மூலம் அரசாங்கம் நாட்டைப் பலி கொடுக் கக்கூடாது.

வடக்கு – கிழக்கு முழுவதிலும் மாவட்டச் செயலாளர்கள் 7 பேர், பிரதேசசெயலாளர்கள் மற்றும் கிராம அலுவலர்கள் ஆயிரக்கணக்கானோரென அரசாங்க நிர்வாகம் உள்ளபோது, புதிய கட்டமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டிய அவசியமில்லை.

புதிய பொதுக்கட்டமைப்பைக் கட்டியெழுப்பினால் கோடிக்கணக்கான பணத்தை புலிகள் போன்ற இதுவரை ஜனநாயகத்தில் இணைந்துகொள்ளாத அமைப்புகளிடம் எந்த அடிப்படையில் வழங்குவது.

அரசுக்குப் பதில் கூறவேண்டிய உத்தியோகத்தர்கள் ஆயிரக்கணக்கிலுள்ள அரச கட்டமைப்பை ஒரு பக்கத்தில் போட்டுவிட்டு, விடுதலைப்புலிகளிடம் வடக்கு – கிழக்குப் பிரதேசங்களின் புனர்நிர்மாணங்களை ஒப்படைத்தால், புலிகள் எந்தவித உதவிகளையும் மக்களுக்கு வழங்கமாட்டார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எவரதும் தனிப்பட்ட சொத்தல்ல!

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



சிறிலங்கா சுதந்திரக்கட்சி, பண்டாரநாயக்காக்களினதோ அல்லது வேறெந்த அரசியல்வாதிகளினதோ சொத் தல்ல என பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ தெரிவித்தார்.

மகரகமவில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் இளைஞர் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

சுதந்திரக்கட்சி யாருடைய தனிப்பட்ட சொத்தல்ல. அது இந்த நாட்டில் வாழும் மக்களுக்கு உரித்தான கட்சியெனத் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட உல்லாசப் பயணத்துறை அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க தனதுரையில் –

சுதந்திரக்கட்சி மற்றைய கட்சிகளைப் பார்த்து பொறாமைப்படக் கூடாது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உடைந்து நொருங்கும் அளவில் நின்றபோதும், அது தன்னைச் சுதாகரித்துக்கொண்டு மீண்டும் பழைய நிலைக்கு வந்துவிட்டது.

சில தனியார் ஊடகங்களும், ஐ.தே.கட்சியினரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை உடைப்பதற்கு முயற்சி செய்துவருவதாகவும் அவர் தெரிவித்தார். (01)

# 12 அகதிகள் தாயகம் திரும்பினர்

(கொழும்பு)

கடந்த தமிழ் நாட்டிலிருந்து 12 பேர் கடல் வழியாகத் தாயகம் திரும்பியுள்ளனர்.

வியாழக்கிழமை ஒரு தமிழர், ஒரு முஸ்லிம், ஒரு சிங்களவர் என 3 பேரும், வெள்ளிக்கிழமை இரவு 9 பேரும் என 12 பேர் மீன்பிடி வள்ளங்களில் தாயகம் திரும்பியுள்ளனர்.

தலைமன்னார் பகுதியிலுள்ள கடல் திட்டியொன்றில் இறக்கிவிடப்பட்ட இவர்கள், இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பின்னர் இவர்கள் தலைமன்னார் பொலிஸார் ஊடாக மன்னார் மாவட்ட நீதி பதி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு, சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (201)

# தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு அதிகாரமில்லை

## மானியங்கள் ஆணைக்குழு தகவல்

(கொழும்பு)

தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு எந்தவொரு அதிகாரமும் இல்லையென பேராசிரியர் ரஞ்சித் மென்டிஸ் தெரிவித்தார்.

தனியார் நிறுவனங்களுக்குப் பட்டங்களை வழங்கும் உரிமையை ஏற்படுத்திக்கொடுப்பதற்காக 1972 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டபீடத்தின் ஊடாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுமதி வழங்கபபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறான அனுமதியை வழங்கும்போது குறித்த நிறுவனங்கள் தொடர்பாக உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# காணாமற்போன மின்பிறப்பாக்கிகள் நேற்று முன்தினம் பொலிஸாரால் மீட்பு

திருகோணமலை மாவட்ட செய லாளர் அலுவலகத்தில் அண்மை யில் காணாமற்போன 12 மின்பிறப் பாக்கிகளும் நேற்று முன்தினம் இரவு பொலிஸாரால் கண்டுபிடிக் கப்பட்டன.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றையடுத்து, காணி அலுவலகத்துக்குப் பின்புறமாக விறகுகளுக்குள் இவை மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸாரால் கண்டுபிடிக்கப் பட்டன.

*சுனாமி அனர்த்த நிவாரணமாக* இந்தியாவால் வழங்கப்பட்டு, களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 95 ஜெனரேற்றர்களில் 12 ஜெனரேற்றர்கள் மர்மமான முறையில் காணாமற் போயிருந்தன.

இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் உதவி காணி ஆணையாளர், அலுவலக எழுதுவினைஞர் மற்றம் சிற்றூழியர் ஒருவர் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

காணாமற்போன இந்த 12 மின் பிறப்பாக்கிகளும் பொலிஸாரின் கண்ணில் தெரியக்கூடியவகையில் நேற்று முன்தினம் இரவு குறிப்பிட்ட இடத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. *இதனை எடுத்தவர்களே* மீண்டும் கொண்டுவந்து அந்த இடத்தில் வைத்துள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# தமிழ்கூட்டமைப்பு புறக்கணிப்புக்கும் அமெரிக்காவுக்கும் தொடர்பில்லையாம்

## தூதரக அதிகாரி தகவல்

(கொழும்பு)

சமீபத்தில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட வந்த முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகளான பில் கிளின்டன் மற்றும் ஜோர்ச் புஷ் ஆகியோருக்கு வழங்கப்பட்ட அரச இராப்போசன விருந்தில் கலந்துகொள்ள, தமிழத்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்படாமைக்கும், தமக்கும் எதுவித சம்பந்தமுமில்லை என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

''எமக்கு இதில் எந்தவித சம்பந்தமுமில்லை. அழைப்பிதழ் பட் *டியல் அரசினாலேயே முழுமையாகத் தயாரிக்கப்பட்டது''* – என்று கொழும்பிலுள்ள அமெரிக்க தூதர அதிகாரி பிலிப் கிரானி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதியே அவர் நடத்திய இந்த இராப்போசன விருந்துக்கு யாரை அழைப்பது குறித்துத் தீர்மானித்தார். யாரை அழைப்பது குறித்தும் தமது தூதரகத்துடன் எத்தகைய ஆலோசனைக் கூட்டமும் நடைபெறவில்லை.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர், அமெரிக்க ஜனாதிபதிகளுக்கான இராப்போசன விருந்தைப் புறக்கணித்தனர் என கொழும்பு ஊடகங்களில் வெளிவந்த செய்தி *களை மறுதலித்த கூட்டமைப்பினர்,* தமக்கு அழைப்பே விடுக்கப்படவில்லை எனத் தெரிவித்திருந்தனர். இந்த நிலையிலேயே கூட்டமைப்பினர் புறக்கணிக்கப்பட்டதற்கும் தமக்குச் சம்பந்தமில்லை என அமெரிக்காவும் தெரிவித்துவிட்ட நிலையில், ஜனாதிபதி சந்திரிகாவே புறக்கணிப்புக்கு முழுமையான காரணமென கொழும்பு அரசியல் மட்டங்களில் பேச்சடிபடுகின்றது.

அமெரிக்காவுக்கு எதிராகக் கடுமையான கருத்துக்களை வெளியிட்டுவரும் சிங்கள இனவாதக் கட்சியான ஜே.வி.பி, இந்த இராப்போசன விருந்துக்கு அழைக்கப்பட்டதும், ஆச்சரியப்படும் வகை *யில் அதன் பிரசாரச் செயலாளர்* விமல் வீரவன்ச அதில் கலந்துகொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# தென்னாபிரிக்காவிடம் சிம்பாப்வே இனிங்ஸால் தோல்வி கண்டது!



(கேப்டவுண்)

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் - இரண்டாவது நாளிலேயே - சிம்பாப்வே அணி இனிங்ஸ் தோல்விகண்டது.

முதல்நாள் ஆட்டத்தில் சிம்பாப்வே அணி 54 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்ததால், தென்னாபிரிக்க அணி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடி 340 ஓட்டங்களை 3 விக்கெட்டுக்களை மட்டுமே இழந்து பெற்றிருந்தது.

இந்தநிலையில் - முதல்நாளே சிம்பாப்வே அணி இரண்டாவது இனிங்ஸில் விளையாடி 1 விக்கெட் இழப்புக்கு 52 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இரண்டாம் நாளான நேற்றுமுன்தினம் தொடர்ந்து ஆடிய சிம்பாப்வே அணி, ஸ்கோர் 59ஆக இருந்தபோது, ரோஜரின் விக்கெட்டை இழந்தது. இவர் 28 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்த பின்னர், ஏபிரஹாமுடன் மசகட்சா இணைந்துகொண்டார். இவர்கள் இருவரும் அபாரமாக நிலைத்து நின்று ஆடியதால், சிம்பாப்வே அணியின் ஸ்கோர் ஓரளவுக்கு உயர்ந்தது.

ஸ்கோர் 157ஐ எட்டியபோது 46 ஓட்டங்களைப் பெற்றிருந்த மசகட்சா ஆட்டமிழந்தார். இதைத் தொடர்ந்து ரெய்லர் களமிறங்கி 9 ஓட்டங்களையும், தைபு 9 ஓட்டங்களையும், சிகும்புரா ஓட்டமெதையும் பெறாமலும் ஆட்டமிழந்தனர்.

ஸ்கோர் 186ஆக இருக்கும்வரை சிம்பாப்வே அணிக்கு நம்பிக்கையூட்டிக்கொண்டிருந்த ஏபிரஹாம் 72 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தபின்னர் ஹீத் ஸ்ரீக் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.


எனினும் பிளிக்நெட்டின் அதிரடி ஆட்டம் இந்தப் போட்டியில் சற்று சுவாரஸ்யத்தை ஏற்படுத்தினாலும், கிறீபர் 2 ஓட்டங்களுடன் ரன் அவுட்டாக - கடைசி விக்கெட்டாக பிளிக்நெட் ஆட்டமிழந்தார்.

இவர் 58 பந்துகளில் 3 பவுண்டரிகள், 6 சிக்ஸர்களுடன் 61 ஓட்டங்களைப் பெற்றார்.

265 ஓட்டங்களுக்குள் சிம்பாப்வே அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்ததால் ஒரு இனிங்ஸ் மற்றும் 21 ஓட்டங்களால் படுதோல்விகண்டது.

பந்துவீச்சில் போயே -4, என்ரினி -2, லாங்வெற் -2, கலிஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

## சதுரங்கப் புதிர்



**இன்றைய கேள்வி:**

கறுப்பினது நகர்த்தல் கறுப்பு வெற்றிகொள்ள என்ன நகர்த்தலைச் செய்யவேண்டும்? *(விடை நாளை)*

**நேற்றைய கேள்விக்கான விடை:**

1... $Be_5$ (check mate ஆக்குவதாக பயமுறுத்துகின்றது) 2.. $Bc_2$ கறுப்பானது 3.. $Bg_7$ நகர்த்தலுடன் வெள்ளையினது Rook இனை வெற்றிகொள்கின்றது.

**தொகுப்பு - சி. வித்தியாதரன்.**

## யூனியன் கல்லூரி அணி 3 பிரிவுகளிலும் சம்பியன்!

(மல்லாகம்)

தெல்லிப்பழைக் கல்விக்கோட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் மூன்று பிரிவுகளிலும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி முதலாம் இடத்தைக் கைப்பற்றியது.

15 வயதுப் பிரிவு -

1ஆம் இடம் - யூனியன் கல்லூரி,
2ஆம் இடம் - மகாஜனாக் கல்லூரி,
3ஆம் இடம் - அருணோதயாக் கல்லூரி.

17 வயதுப் பிரிவு -


1ஆம் இடம் - யூனியன் கல்லூரி,
2ஆம் இடம் - மகாஜனாக் கல்லூரி,
3ஆம் இடம் - மெய்கண்டான் மகா வித்தியாலயம்.

19 வயதுப் பிரிவு -

1ஆம் இடம் - யூனியன் கல்லூரி,
2ஆம் இடம் - மகாஜனாக் கல்லூரி,
3ஆம் இடம் - வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம். (72)

### லினாரஸ் செஸ்

## மூன்றாம் இடத்தில் விஸ்வநாதன் ஆனந்த்



(லினாரஸ்)

லினாரஸ் செஸ் தொடரில் விஸ்வநாதன் ஆனந்த் ஒன்பதாவது சுற்றை சமன் செய்தார்.

ஸ்பெயினின் லினாரஸ் நகரில் சூப்பர் கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் தொடர் நடைபெறுகிறது. வெள்ளிக்கிழமை நடந்த ஒன்பதாவது சுற்றுப் போட்டியில் இந்தியாவின் ஆனந்த், பல்கேரியாவின் சேவலின் தபலோவை எதிர்த்து விளையாடினார். இரு வீரர்களும் மிகக் கவனமுடன் ஆட, 69ஆவது காய் நகர்த்தலில் போட்டி சமனிலையில் முடிந்தது.

மற்றொரு ஆட்டத்தில் முதல்நிலை வீரரான ரஷ்யாவின் கஸ்பரோவ், உஸ்பெகிஸ்தானின் ரஸ்தம் காசிம் ஷனோவை வீழ்த்தினார். ஹங்கேரியின் பீற்றர் லீகோ, இங்கிலாந்தின் மைக்கல் அடம்சை சமன் செய்தார்.

இதன்படி கஸ்பரோவ் 5.5 புள்ளிகளுடன் தொடர்ந்து முதல் இடத்தைத் தக்கவைத்துள்ளார். இரண்டாவது இடத்தில் தபலோவ் (4.5 புள்ளி), மூன்றாவது இடத்தில் ஆனந்த், பீட்டர் லீகோ (4 புள்ளி) ஆகியோர் உள்ளனர்.

## லாரா, சர்வான் உட்பட ஏழு வீரர்கள் மேற்கிந்திய அணியிலிருந்து நீக்கம்!



(கயானா)

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியில் இருந்து லாரா, சர்வான் உட்பட 7 வீரர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியில் கடந்தசில மாதங்களாக ஒப்பந்தப் பிரச்சினை நிலவி வருகிறது. இதன் உச்சக்கட்டமாக தென்னாபிரிக்க மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு எதிரான போட்டியில் கலந்துகொள்ளும் மேற்கிந்தியத் தீவுகள் அணியில் இருந்து கப்டன் லாரா, சர்வான் உட்பட 7 வீரர்கள் நீக்கப்பட்டனர். தனிப்பட்ட முறையில் இந்த வீரர்கள் தொலைபேசி நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் செய்துள்ளனர்.

இந்தநிலையில் ஒட்டுமொத்த மேற்கிந்தியத்தீவு அணிக்கும் மற்றொரு மொபைல் நிறுவனம் ஸ்பொன்சர் செய்துள்ளது. இதனால் பிரச்சினை ஏற்பட்டது.

அணியின் ஒட்டுமொத்தக் கட்டுப்பாடுகளுக்கு மூத்த வீரர்கள் ஒத்துவராததையடுத்து இவர்கள் அனைவரும் நீக்கப்பட்டனர்.

லாரா, சர்வான், கெய்ல், ஸ்மித், பிராவோ, எட்வேட்ஸ், ராம்போல் ஆகியோர் நீக்கப்பட்ட வீரர்கள் வரிசையில் இடம்பிடித்துள்ளனர். தென்னாபிரிக்க அணி இந்த மாதம் 31ஆம் திகதி முதல் மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது. இந்தியப் பயணம் முடிந்த பின்னர், பாகிஸ்தான் அணி எதிர்வரும் மே மாதம் மேற்கிந்தியத் தீவுகளுக்குச் செல்லவுள்ளது.

## பாகிஸ்தான் அதிபர் முஷாரப்புக்கு அகமதாபாத் வருமாறு அழைப்பு!



இந்திய - பாகிஸ்தான் இடையே நடைபெறும் ஒருநாள் போட்டியைக் காண அகமதாபாத் வரும்படி -பாகிஸ்தான் அதிபர் முஷாரப்புக்கு குஜராத் கிரிக்கெட் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான முதல் டெஸ்ட் போட்டி நாளை மொஹாலியில் தொடங்கவுள்ளது.

இந்தப் போட்டியைப் பார்க்கத் தான் விரும்புவதாக பாகிஸ்தான் அதிபர் முஷாரப் தெரிவித்திருந்தார். ஆனால் இந்தியா அழைத்தால் மட் டுமே செல்வேன் என்றும் அவர் கூறியிருந்தார்.

இந்தநிலையில், அகமதாபாத்தில் நடைபெறும் ஒருநாள் போட்டியைப் பார்வையிட வருமாறு முஷாரப்பிற்கு குஜராத் கிரிக்கெட் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. இதுபற்றி அந்தச் சங்கத் தின் தலைவர் நர்ஹாலி அமின் கூறுகையில் -

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையே நடைபெறும் கிரிக்கெட் போட்டியைப் பார்வையிட, பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப்புக்கு அழைப்புத் தேவையில்லை. கட்டாயம் அழைப்பு வேண்டுமென்று அவர் விரும்புவாரேயானால், அதுபற்றி மத்திய அரசோ, இந்திய கிரிக்கெட் சபையோதான் முடிவு செய்யவேண்டும்.

அகமதாபாத்தில் நடைபெறும் 4ஆவது ஒருநாள் போட்டியைப் பார்வையிடவருமாறு குஜராத் மாநில ஆளுனர், முதல்மந்திரி மற்றும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ் அதிகாரிகள் உட்பட பல முக்கிய பிரமுகர்களை அழைத்துள் ளோம்.

பாகிஸ்தான் நாட்டின் முதல் குடிமகனான அதிபர் பர்வேஸ் முஷாரப் வந்தால், அவரை மகிழ்ச்சியுடன் வரவேற்போம்.

அரங்கத்துக்குள் பிளாஸ்ரிக் போத்தல்கள், உணவு மற்றும் தின்பண்டங்களை வெளியிலிருந்து கொண்டுவரத் தடை விதிக்கப்பட்டுள்ளது. கலரிகளுக்குப் பின்புறம் தேவையான உணவு, தின்பண்டங்கள் விற்கவும், போதுமான குடிநீர் வசதிக்கும் ஏற்பாடுகள் செய்துள்ளோம்.

இரு அணிகளின் வீரர்கள் அமரும் இடத்தின் முன் பகுதியில் உடைக்கமுடியாத கண்ணாடி பொருத்தப்படும் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## பாகிஸ்தானுடனான தொடரை வென்று தரவரிசையில் முன்னேறுமா இந்தியா?

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் தொடரை வென்றால், சர்வதேச கிரிக்கெட் சபையின் தரவரிசையில் 2ஆவது இடத்துக்கு இந்தியா முன்னேறும் வாய்ப்புக் கிடைக்கும்.

இந்தியா தற்போது டெஸ்ட் தரவரிசையில் 3ஆவது இடத்தில் உள்ளது. 2001ஆம் ஆண்டு மே மாதம் அறிமுகம் செய்யப்பட்ட தரவரிசை முறையில் இந்தியா பெற்றுள்ள உயர்ந்த இடம் இதுவே.

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் இந்தியா வென்றால், 2 ஆவது இடத்துக்கு முன்னேற முடியும். இங்கிலாந்து தற்போது 2ஆவது இடத்தில் உள்ளது.

அதே நேரம் 1-0 என்ற கணக்கில் இந்தியா வென்றால், 110 புள்ளிகளைப் பெற்று இங்கிலாந்துடன் சமநிலையை எட்டமுடியும். இருப்பினும் சதாம்ச புள்ளிக் கணக்கின்படி இங்கிலாந்து 2ஆவது இடத்தில் தொடர்ந்து இருக்கும்.

தற்போது 5ஆவது இடத்திலுள்ள பாகிஸ்தான், 3-0 அல்லது 2-0 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரைவென்றால், 3 ஆவது இடத்துக்கு முன்னேறும். ஆனால் தோல்வியுற்றால் 6 ஆவது இடத்துக்குத் தள்ளப்படும்.

அதேநேரத்தில் இந்த டெஸ்ட் தொடர் சமநிலையில் முடிந்தால், இந்தியாவின் புள்ளிக் கணக்கு குறையும், பாகிஸ்தானின் புள்ளிக் கணக்கு உயரும். இருப்பினும் தரவரிசையில் அவர்களுடைய இடத்தில் எந்த மாற்றமும் இருக்காது.

## புதுடெல்கி மைதானத்தை சீரமைக்க காலக்கெடு!

(புதுடெல்கி)

இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான ஒருநாள் போட்டிக்காக டெல்கி ஃபெரோஷா கோட்லா மைதானத்தை, மார்ச் 17ஆம் திகதிக்குள் தயார் செய்யவேண்டும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை காலக்கெடு நிர்ணயித்துள்ளது.

இரு அணிகளுக்கு இடையேயான ஒருநாள் போட்டி ஏப்ரல் 17 ஆம் திகதி இங்கு நடைபெறவுள்ளது.

அதற்கு ஒரு மாதத்துக்கு முன்பாகவே மைதானத்தைச் சீரமைக்கும் பணியை முடித்து, தயாராக வைத்திருக்கவேண்டும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை ஆடுகள மற்றும் மைதானக் குழுத் தலைவர் வெங்கட் சுந்தரம் அறிவுறுத்தியுள்ளார்.

## விளையாட்டு

## டேவிஸ்கிண்ண ரெனிஸ் இந்திய அணி வெற்றி!

(புதுடெல்கி)


டேவிஸ் கிண்ண ரெனிஸ் தொடரில் இந்திய அணி 3-0 என்ற முன்னிலையில் சீனாவை வீழ்த்தியது.

இந்திய - சீன அணிகளுக்கிடையிலான ஆசிய - ஓசியானியா குரூப் I ரெனிஸ் தொடர் டெல்கியில் நடைபெற்று வருகிறது. முதல் போட்டியில் இந்திய அணியின் ஹர்ஷ் மன்கட் வெற்றிபெற்றார். இரண்டாவது போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் பிரகாஷ் அமிர்தராஜ், சீனாவின் வாங் யூவைச் சந்தித்தார். இதில் அபாரமாக விளையாடிய பிரகாஷ் எளிதில் வெற்றிபெற்றார்.

இவர் 6-3, 6-4, 6-2 என்ற நேர் செட்களில் வாங் யூவை வீழ்த்தினார். அடுத்ததாக இரட்டையர் போட்டியில் லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி ஜோடி, வாங் யூ, ஜு பெங் கியாங் ஜோடியுடன் மோதியது.

தொடக்கத்தில் சிரமப்பட்ட இந்திய ஜோடி, அடுத்தடுத்த செட்களில் சிறப்பாக விளையாடியது. இறுதியில் பயஸ், பூபதி ஜோடி 7-6, 6-3, 3-6, 6-1 என்ற செட்களில் சீன ஜோடியை வீழ்த்தியது.

இதன் மூலம் இந்திய அணி 3-0 என்ற முன்னிலையில் சீனாவை வென்றது.




*அவுஸ்ரேலியன் கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் இத்தாலி வீரர் ஜியான் கார்லோபிஸிசெலா முதலிடத்தைப் பிடித்தார். இரண்டாவது இடத்தை பிரேசிலின் ரூபென்ஸ் பெரிசெலோவும், மூன்றாம் இடத்தை ஸ்பெயின் பெர்னாண்டோ அலோன்சாவும் பெற்றனர்.*

*இந்தப் போட்டியில் தமிழக வீரர் நரேன் கார்த்திகேயன் 15 ஆவது இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.*

# வெகுஜனப் போராட்டம் நடத்தப்போவதாக வடமராட்சி கடற்தொழிலாளர்கள் எச்சரிக்கை

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு கரையோரப் பகுதியில் கடல் அரண் அமைப்பதற்கும், படகுகள் செல்லும் வான் பாதைகளைப் புனரமைக்கவும், படையினர் அனுமதிக்காவிட்டால் வெகுஜனப் போராட்டம் ஒன்றை நடத்தப்போவதாக - வடமராட்சி வடக்கு மற்றும் வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சியில் தங்கியுள்ள மீனவர் சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

நேற்றுமுன்தினம் மாலை பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு வருகைதந்த அரச அதிபர் கணேஸிடம் கையளித்த மகஜரிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கற்கோவளம்முதல் தொண்டைமானாறு வரையான கரையோரப் பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தின்போது தேசமடைந்த மீன்பிடிப் படகுகள் செல்லும் வான் பாதை, கடல் அரண் அமைக்க சக்கோட்டை மீனவர்கள் முற்பட்டவேளையில் படை யினர் அதற்குத் தடை விதித்துள்ளனர். இதனால் தமது திருத்த வேலைகளை மீனவர்கள் மேற்கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வான் பாதை புனரமைப்பதற்கு படையினர் தடைவிதித்துள்ளதால் கடற்தொழிலை மீளவும் ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வான்பாதை அமைப்பதற்கும், கடல் அரண் அமைப்பதற்கும் படையினர் விதித்த தடையை உடனடியாக நீக்கவேண்டும். நீக்கத் தவறின் மீனவ சமூகத்தினர் ஒன்றிணைந்து வெகுஜனப் போராட்டத்தை நடத்தப்போவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜர் கையளிக்கப்படுவதற்கு முன்னதாக வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்த சங்கங்களும், வடமராட்சி வடக்கு மீனவர் சங்கப் பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து நடத்திய கூட்டத்திலேயே அரச அதிபரிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் கையளிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. (14)

## கிரனேட் வீச்சு

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடி இராணுவக் காவலரண் மீது கடந்த வெள்ளிக்கிழமை கிரனேட் வீசப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

வெள்ளிக்கிழமை இரவு 8.50 மணியளவில் காவலரண்மீது வீசப்பட்ட குண்டு அருகில் உள்ள வீட்டின் சீமெந்துக்கூரைமீது வீழ்ந்து வெடித்ததாகவும் இதனால் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## குணமாக்கல் வழிபாடு

குணமாக்கல் வழிபாடு எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். அடைக்கல அன்னை ஆலய முன்றலில் மாலை 5 மணி வரை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி போல் றொபின்சன் அடிகள் குணமாக்கல் வழிபாடுகளை நிறைவேற்றுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (206)

# சுனாமி முத்திரை விநியோகத்தின்போது பணம் அறவிடப்பட்டதாக முறைப்பாடு!

(ஊர்காவற்துறை)

மெலிஞ்சிமுனை கிராமத்தில் சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான முத்திரை விநியோகத்தின்போது குறிப்பிட்ட தொகைப்பணமும் அறவிடப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

ஊர்காவற்துறைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே.54 கிராம அலுவலர் பிரிவிலுள்ள 199 குடும்பங்களுக்கு வழங்கவென மகளிர் அபிவிருத்தி சமூகநலன் அமைச்சினால் வழங்கப்பட்ட 375 ரூபா பெறுமதியான 32 வாரங்களைக்கொண்ட முத்திரை விநியோகம் இடம்பெற்றது.

கடந்த புதன்கிழமை மெலிஞ்சிமுனை இருதயராசு சனசமூக நிலையத்தில் வைத்து வழங்கப்பட்ட முத்திரைகளுக்கு ஒரு குடும்பத்திடமிருந்து 300 ரூபா பணம் அறவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுபற்றி கடற்தொழிலாளர் சங்கப் பிரதிநிதி கருத்துத் தெரிவிக்கையில் -

எமது சங்கத்தில் போதியளவு பணம் இல்லாமையால் இவ்வறான நடவடிக்கையை மேற்கொள்வதாகத் தெரிவித்தார். (91)

# படைத்தளபதியின் உறுதிமொழி படையினரால் மீறப்பட்டுவிட்டது!

## பத்திரிகையாளர் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

வேம்படி மகளிர் கல்லூரி மாணவி இராணுவ உழவு இயந்திரத்தால் மோதப்பட்டு உயிரிழந்த சம்பவத்தை அடுத்து, ஏற்பட்ட அசம்பாவிதங்களின்போது செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர் ஒருவர் படையினரால் தாக்கப்பட்டதும், மற்றொருவரின் மோட்டார் சைக்கிள் சேதமாக்கப்பட்ட சம்பவத்தையும் வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

மேற்படி சம்பவம் குறித்து சங்கம் வெளியிட்ட செய்திக்குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

களத்தில் நின்று செய்தி சேகரிப்பதற்காக சென்றிருந்தவேளை தம்மை செய்தியாளர் என அடையாளம் காட்டியபோதும் தாக்கப்பட்டமை கண்டனத்திற்குரியது என்றும் -

செய்தியாளரின் பாதுகாப்புத் தொடர்பாக கடந்த வருடம் நடைபெற்ற பத்திரிகையாளர்களுடனான சந்திப்பின்போது உறுதிமொழிகளை வழங்கிய யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி - மீண்டும் இவ்வாறான சம்பவம் நடைபெறமாட்டாதெனவும் உறுதியளித்தபோதும் -

செய்தியாளர் தாக்கப்பட்டமை வேதனைக்குரிய விடயமாகும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மெலிஞ்சிமுனை கடற்தொழிலாளர்களுக்கு எவ்வித உதவிகளும் வழங்கப்படவில்லை!

(ஊர்காவற்துறை)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மெரிஞ்சிமுனைப்பகுதி கடற்தொழிலாளர்களுக்கு இது வரை எந்தவித உதவிகளும் வழங்கப்படவில்லையென பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

மெலிஞ்சிமுனையைச் சேர்ந்த 54 தொழிலாளர்களது சுமார் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகள் முழுமையாகக் கடலுடன் அடித்துச் செல்லப்பட்டமையால் மீண்டும் தமது தொழிலை மேற்கொள்வதற்கு எந்தவித வசதி வாய்ப்புகளுமின்றி கடற்தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு இரண்டு மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் - அரசாங்கமோ, வேறு பொது அமைப்புகளோ தமக்கான உதவிகளை வழங்கவில்லையெனவும் 375 ரூபா பெறுமதியான முத்திரைகள் மட்டுமே வழங்கப்பட்டு வருவதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (91)

## சிகை ஒப்பனையாளர் சங்க பொதுக் கூட்டம்

யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கங்களின் ஒன்றியத்தின் பொதுக் கூட்டமும், நிர்வாக சபை தெரிவுக்குமான பொதுக்கூட்டம் நாளை மறுதினம் முற்பகல் 9 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் அனைத்து சிகை ஒப்பனை நிலையங்களையும் மூடிவிட்டு - சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு, பொது அமைப்புகளின் ஒன்றியப் பொறுப்பாளர் அ.சுதாஸ் கடிதமூலம் கேட்டுள்ளார். (206)

# நீண்டகாலமாக திருத்தப்படாத அராலி - வேலணை பிரதான வீதி

(அராலி)

அராலி - வேலணைப் பகுதிகளுக்கான பிரதான வீதி நீண்டகாலமாகக் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. இதனால் போக்குவரத்துக்குப் பெரும் இடையூறாக உள்ளதுடன் விபத்துக்களும் ஏற்படுகின்றன.

வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட இந்த வீதியால் - புங்குடுதீவு, நயினாதீவு, வேலணை ஆகிய இடங்களுக்கான பிரதான போக்குவரத்து வீதியாக இது உள்ளது.

விவசாயிகள், பாடசாலை மாணவர்கள் உட்பட அனைவரும் இந்த வீதியையே உபயோகிப்பதால், இதனைப் புனரமைத்துத் தருமாறு உரியவர்களிடம் பலமுறை கேட்டும் இந்தவீதி செப்பனிடப்படவில்லையென அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இதேவேளை, வேலணை துறையூர் சந்தி, அதனை அண்மித்த பகுதிகளில் வசிக்கும் மக்கள் இந்த வீதியில் பாரிய குழிகள் காணப்படுவதால் இதைப் பயன்படுத்துவதைக் கைவிட்டுள்ளனர். மாற்றுவழியாகக் கடற்கரையோரமாகவே (தரவையால்) போக்குவரத்துகள் யாவும் இடம்பெறுகின்றன. (91)







யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் தலைவர்சைவப் புலவர் வல்லிபுரம் கந்தசாமிக்கு நேற்று நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் பாராட்டுவிழா இடம்பெற்றபோது - விழா நாயகர் மேடையில் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும், பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# இனரீதியாக தமிழர்கள் முடக்கப்பட்டதாலேயே விளையாட்டுத்துறையில் நாம் முன்னேறவில்லை

## ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் சுந்தரேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

1950 களில் நடைபெற்ற ஆசிய நாடுகளின் உயரம் பாய்தல் போட்டியில் வலிகாமம் வடக்கைச் சேர்ந்த நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் என்னும் வீரர் ஆசியாவிலேயே முதலிடம்பெற்று எமது நாட்டுக்கும், எமது கிராமத்துக்கும் பெருமை சேர்த்தார். அதன்பின்னர் கடந்த 5 தசாப்தமாக எவரும் அவரின் சாதனையை முறியடிக்கவில்லை. இதற்குக் காரணம் நாம் ஓரளவு கற்றுக் கொண்டபின் எல்லாம் கற்றுவிட்டோம் என்ற நினைப்பே ஆகும் என

வட.வடக்கு பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட தடகள விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன் தெரிவித்தார்.

பிரதேச செயலர் சு.முரளிதரன் தலைமையில் மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டரங்கில் நடைபெற்ற இந்த விளையாட்டுப் போட்டியில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

நான், நாங்கள், அவர்கள் என்ற மூன்று கோட்பாடுகளுக்குள் எம்மை நாம் தயார்ப்படுத்தவேண்டும். அதாவது விளையாடும் திறமை சிறுவயதுமுதல் எல்லோரிடமும் காணப்படுகிறது. பின்னர் ஆக்கபூர்வமான பங்களிப்புக்கள், தோல்வியைச் சந்திக்கும்போது கிடைக்கின்ற விமர்சனம், இனரீதியான திறமைகள் வளர்க்கப்படாது முடக்கப்படுதல் போன்ற காரணிகளால் விளையாட்டுத்துறையை முன்னர்போல முன்னுக்குக் கொண்டுவரமுடிவதில்லை.

இந்தப்பிரதேச இளைஞர், யுவதிகளிடையே நல்ல திறமைகள் காணப்படுகின்றன. ஆனால், அதற்கான வாய்ப்புக்கள் வசதிகள் பற்றாக்குறையாகவே காணப்படுகின்றன எனத் தெரிவித்தார்.

தெல்லிப்பளை பல.நோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் சி.சிவமகாராசா உரையாற்றுகையில் -

வலி.வடக்கு பிரதேசம் சகல துறை விளையாட்டுக்களிலும் தொன்றுதொட்டு வெற்றிபெறும் பிரதேசமாகும். இங்குள்ள பிரபல பாடசாலைகள் ஒரு காலத்தில் உதைபந்தாட்டத்தில் முன்னணி வகித்தவையாகும். விளையாட்டைப் பொழுதுபோக்கு நிகழ்வாகக் கருதிவிடமுடியாது. இதன் நோக்கம் வெற்றிதோல்விகளைச் சமமாக ஏற்றுக்கொள்வதும், பொறாமையை விடுத்து ஒற்றுமையாகக் கைகோர்ப்பதும் ஆகும். உடல் வலிமையுடன், உள வலிமையையும் விளையாட்டுக்கள் ஏற்படுத்த வேண்டும் எனத் தெரி வித்தார்.

இந்த விளையட்டு விழாவில் மல்லாகம் ஆர்.டி.எஸ். கழகம் முதலாமிடத்தையும், இளவாலை சென். லூட்ஸ் கழகம் இரண்டாமிடத்தையும், இளவாலை இளஞ்சுடர் விளையாட்டுககழகம் முன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன. (101)




# பட்டுணர்ந்தவன் இவன்!

- தச்சா




அந்தச் சந்தியில் கூட்டமாக அவனும் நின்ற நாட்கள் ஓடிவிட்டது. அன்றைய நாளில் செய்த அட்டகாசம் இவன் உருவில் இன்றும் அதே சந்தியில் தொடர்ந்து அரங்கேறுகிறது.

'புதிய முகங்களின் கூட்டம்', அவர்களைப் பார்க்கின்றான். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக உடை அணிந்தும், தலைமுடி வெட்டியும், ஒவ்வொருவிதமான மோட்டார் சைக்கிளிலும், இருந்தும் நின்று கொண்டும், பம்பல் அடிப்பதும், சத்தம் போட்டுச் சிரித்து, வீதியால் செல்பவர்களைக் கேலி செய்வதுமாக இருந்தார்கள்.

வீதியில் செல்பவர்கள் இவர்களைப் பார்த்ததும், ஒதுங்கியும், வேகமாகவும் அவ்விடத்தைவிட்டுச் சென்று கொண் டிருந்தார்கள். 'ஓ'... வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கும் அல்லது வெளிநாட்டில் அவர்களது சகோதரமோ, அல்லது உறவினர்களோ, இருக்கலாம் என்று நினைத்துக் கொண்டு, அந்தக் கூட்டத்தின் அருகில் சென்றான்.

இவன் வருவதைப் பார்த்தும், எந்தவித மாறுதலும் இல்லாமல் அவர்கள் தங்களுடைய நடவடிக்கைகளில் குறியாக இருந்தார்கள்.

தம்பிமாரே! இது சந்தி. நாலுபேர் வந்து போகின்ற இடம். இப்படி இடையூறு செய்யலாமா? கெட்டது செய்தால் நரகத்துக்குத்தான் செல்வீர்கள் என்றதும்,

'கூட்டத்தில் நின்றவர்கள் எல்லோரும் இவனைப் பார்க்கின்றார்கள்'. கூட்டத்தில் நின்ற ஒருவன், இவர் கெட்டது செய்து நரகத்துக்குச் சென்று வந்து பேசுகின்றார் என்றான்.

'மௌனமானவன்' எந்தவித பதிலும் சொல்லாமல், பிரமை பிடித்தவன் போல, சந்தியைவிட்டு விலகிச் சென்றுகொண்டிருந்தான். ஏனெனில் இவனும் தன்னுடைய காலத்தில் அதே சந்தியில் நின்று பம்பல் அடித்தவன். அந்தச் சந்தி ஆட்கள் எல்லாம் மாறிவிட்டது. ஆனால் குழப்படி மட்டும் இன்னும் மாறவேயில்லை.

'இவன் குடும்பம் இவனால் சிதைந்து போய்விட்டநாள்...'

'பிறரின் துன்பங்களுக்கு ஆளான நாள்...

அன்றைய நாளில்...

வழமையான நேரத்துக்குச் சென்றுவிடவேண்டும். அவசரமாக வெளிக்கிட்டுச் சென்றான் அந்தச் சந்திக்கு! அங்கேதான் அவனுடைய நண்பர்கள் எல்லோரும் ஒன்று கூடுவார்கள்.

'படித்துக்கொண்டிருக்கின்ற பருவத்தில்தான் இப்படியான கூட்டம்' சந்திக்குச் சந்தி ஒன்றுகூடும். அரட்டை என்ற சொல் உருவான இடமென்று சொல்லலாம்... இவனின் அளவுக்கதிகமான பம்பலில் சில வேளைகளில் தெருவே ஆடையிழந்துபோகும்.

அந்தளவுக்குத் தெருவில் போகின்றவர்கள், வருகின்றவர்கள் ஆண்களாக இருந்தால், கோழையானவர்களைப் பார்த்தும், இளம் பெண்களாக இருந்தால் எல்லோரையும் பார்த்துக் கேலி செய்வான். ஏனெனில், பிரச்சினை இவன் பக்கம் குறைவாகக் காணப்படும் என்பதாலும், தப்பித்துக்கொள்ள இலகுவாக இருக்கும் என்பதாலும் ஆகும்.

நண்பர்கள் எல்லோரிடமும் லுமாலா சைக்கிள் இல்லாவிடிலும், ஒரு சிலரிடம் மட்டும் இருக்கின்றபோது, அடிக்கடி யாழ்.வீதியை, ஒரு சைக்கிளில் டபிளாக வலம் வருவான். இந்த வேளைகளில் வம்புக்கு பல பேரை இழுத்து அடிவாங்கியும், அடி கொடுத்தும் – தெருவில் போகின்றவர்கள், வருகின்றவர்கள் எல்லோரிடமும் பேச்சு வாங்கி, விழி பிதுங்கி முழிக்க, அவமானப் பட்டு நிற்பதும் உண்டு.

ஆனாலும், என்ன எல்லோர் முன்னும், தான் அவமானப்பட்டதை அன்றே மறந்து விடுவான்.

அன்று கார்த்திகை விளக்கீடு, தெருவே ஒளிமயமாகக் காட்சிகொடுக்கும் அன்றைய நாள் வீட்டின் வாசலில், வாழைக்குற்றி நட்டு தேங்காய்ப் பாதியில் விளக்கேற்றி, வீட்டு மதிலில் சிட்டியில் விளக்கேற்றியும், ஒவ்வொரு வீடும் அழகாகக் காணப்படும். இவனும் நண்பர்களும் தடிகொண்டும் எரிந்து கொண்டிருக்கும் சிட்டிகளை உடைத்துக் கொண்டு வீடு போய்ச்சேர்ந்தான்.

அங்கே! அவனது வீட்டின் மதிலிலுள்ள சிட்டிகளும் உடைக்கப்பட்டிருந்தது. பார்த்துக்கொண்டு பேசாமல் வீட்டுக்குள் நுழைந்தான்.

"அண்ணா! உனக்கு வேலைவெட்டி இல்லையா? எந்த நேரம் என்று கிடையாதா? சாப்பிடமட்டும் வீட்டுக்கு வருகிறாய். மற்றைய நேரம் தெருவிலே நிற்கிறாய். யாரும் பார்த்தால் என்ன ஆகும். என் பிரன்ஸ் எல்லாம் உன்னைப் பற்றிக் கூடாமல் சொல்லும் போது எனக்கு அவமானமாக இருக்கிறது என்று அவனது ஒரேயொரு தங்கை அண்ணனை மாற்றி விட நினைத்து வாக்குவாதப்படுவாள்.

செவிடன் காதில் சங்கு ஊதினாலும் ஒன்றுமே கேட்காது. அதேபோல யார் யார் எல்லாம் இவனுக்குப் புத்திமதி சொல்லிப் பார்த்தும், எந்தவித பயனும் இல்லாமல் போய்விட்டதனால், யாருமே இவனைக் கண்டுகொள்வதேயில்லை. இதனால் இவனுக்கு "நான்" என்ற அகங்காரம் இருந்தது.

தெருச் சந்தியில் அரங்கேறும் ஏதாவதொரு பிரச்சினை என்றாலும், அவனது வீடு வந்து சேரும் பிரச்சினைகளைத் தாயும், தகப்பனும் ஒருவாறு பிரச்சினைக்குள்ளாக்கப்பட்டவர்களுடன் பேசி, மகனுக்காக மன்னிப்புக்கேட்டுச் சமாளிப்பார்கள்.

இப்படியொரு மகனைப் பெற்றுவிட்டோமேயென்று மனதில் கவலை இருந்தும், ஒரேயொரு மகன் என்றபடியால் எப்படியாவது திருந்திவிட வேண்டுமென்று கோயில்கள் எல்லாம் நேர்த்தியும் வைத்திருந்தாள்.

இப்படியாக எத்தனை தடவைகள் மகனுக்காகத் தாயும், தகப்பனும் படும் பாடு பற்றி, ஒரு சிறு துளிகூட சிந்திக்காமல் மறுபடியும் தனது இளவட்ட ஆட்டத்தில் இறங்கிவிடுவான்.

ஒருநாள் இரவு 10 மணிக்கு பொன்னுத்துரை வீட்டில் களவு போயிருக்கிறது. வேறு யார்? உந்தச் சந்தியில் நிற்கிற பெடியள்தான் செய்திருப்பார்கள் என்று பக்கத்து வீட்டுப் பரிமகள் சொன்னாள்.

இதைக் கேள்விப்பட்டதும், சந்தியில் நின்ற பெடியளும், இவனுமாகக் கூடி பரிமகள் வீட்டுக்குள் நுழைந்து சத்தம் போட்டு வீட்டில் களவு எடுக்கின்ற தென்றால் பகலிலே வந்து எடுப்போம் என்று மிரட்டி, பரிமகள் வீட்டில் இருந்த ரீவியையும், பிறிச்சையும் உடைத்துவிட்டுச் சென்றார்கள்.

ஆத்திரமுற்ற பரிமகளின் வீட்டுக்காரர், இவனின் வீட்டுக்குச்சென்று, சத்தம் போட்டு ஊரைக்கூட்டி, பிள்ளையை மிருகம் போல வளர்க்கக்கூடாது, ஒழுங்காக வளர்க்கப்பார்க்கவும். இல்லாவிட்டால் உயிரோடு இருக்கமாட்டான் என்று சொல்லி விட்டு வந்துவிட்டார்.

ஒன்றுமேயறியாத அவன் தாய்க்கும், தகப்பனுக்கும், தங்கைக்கும் ஒன்று மட்டும் புரிந்துவிட்டது. ஏதோவொரு பிரச்சினையைக் கொண்டுவந்துவிட்டான் என்று. ஒவ்வொருவரும் ஒவ்வொரு மூலையில் இருந்து அழுதவண்ணம் இருந்தார்கள். ஏன் இப்படிச் செய்கிறான்? எங்களை நிம்மதியாக வாழவிடமாட்டானா என்று அழுது கொண்டிருக்க...

அவனது நண்பன் – இவர்கள் வீட்டுக்கு வந்து உங்கட மகனைப் பொலிஸ்காரர் பிடித்துக்கொண்டு சென்றுவிட்டார்கள் என்றதும், 'தாய் பதட்டத்துடன், உடுத்த உடையுடன் பொலிஸ் ஸ்ரேசனுக்கு ஓடினாள்'.

அங்கே இருந்த பொலிஸ்காரரர் ஒருவர். வாங்கோ... நீங்கள்தானா அம்மா என்றார்.

'ஓமோம்...' எங்கே எனது மகன்?

அங்கேதான் இருக்கிறான், என்று கையைக்காட்ட திரும்பிப் பார்க்கிறாள்.

எந்தப் பயமுமின்றி நிலத்தில் உட்கார்ந்திருக்கிறான்.

அவன் அருகில் சென்று,

"ஏன் அப்பு என்ன நடந்தது? நான் சொன்னனான்தானே. தேவையில்லாத பிரச்சினைக்கெல்லாம் போகாதேயென்று பிறகேன் போனனீ".

உன்னை யார் இங்கே வரச்சொன்னது 'என்று சொல்லி முரட்டுப் பார்வையில் தாயைப் பார்த்தான்'.

அழத் தொடங்கினாள்...

'தாய் அழுவதைப் பார்த்த பொலிஸ்காரர்'

அம்மா!' உங்கட மகனை ரிலீஸ் செய்கிறோம். இனிமேல் இப்படி நடக்காமல் பார்த்துக்கொள்ளுங்கோ என்று சொல்லி பத்திரத்தில் அவனுடைய கையொப்பத்தை வாங்கிவிட்டு வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள்.

ஊரெல்லாம் ஒரே கதை. கள்ளன் என்ற பட்டமும் இவனுக்குக் கிடைத்தது. இதனால் வீட்டில் இவனுக்கு மட்டுமல்ல குடும்பத்துக்கே இழுக்கு ஏற்பட்டது. இவன் தங்கையின் திருமணம்கூட தடைப்பட்டது. எத்தனை மாப்பிள்ளைகள் பேசியும், கள்ளன் வீட்டில் எப்படிப் பெண் எடுப்பது என்று மறுத்துவிட்டார்கள்.

இதையெல்லாம் பொருட்படுத்தாமல், தன்னுடைய தேவைகளை நிறைவுசெய்து கொண்டிருந்தான். தன்னுடைய தேவைகள் என்றால் மூன்றாம் தர சினிமாப்படம் பார்ப்பது. அதில் வருகின்ற கதாநாயகர்கள் போல உடை அணிந்து வெளியில் செல்வது, பார்ப்பவர்களுக்கு வேடிக்கையாக இருக்கும்.

யாரையும் பொருட்படுத்தாமல், தன்னை என்ன நினைப்பார்கள் என்ற சிந்தனையும் இல்லாமல் நடமாடினான்.

சிறிதுகாலம் சென்றது. இவன்கூட ஒன்றாகச் சந்தியில் நின்று பம்பல் அடித்தவர்கள் ஒவ்வொருவராகக் கழரத் தொடங்கினார்கள். எல்லா நண்பர்களும் விலகிச் சென்றுவிட்டார்கள்.

நடந்ததை நினைத்துக்கொண்டு அதே வீதியில் வந்துகொண்டிருந்த போது, வாகனத்துக்குக் குறுக்கே சயிக்கிளை விட்டு அடிபடப்பட்டான். கஜெசில் வந்தவர் வாகனத்தைப் பிறேக் போட்டு தனது திசையை மாற்றி வாகனத்தை ஓரமாக நிறுத்திவிட்டு, இறங்கிவந்து சத்தம் போட்டான்.

குறுக்கே போனதுக்குக் குறுக்கே போய்த்தான் பழக்கம்... என்றவன் மீண்டும் வாகனத்தில் ஏறி, எடுத்துக் கொண்டு சென்றுவிட்டான். ஒன்றுமேயறியாததுபோல், உணர்வில்லாமல், பிணமாகச் சென்றுகொண்டிருந்தான்...


## நீறுபூத்த நெருப்பு



நீறுபூத்த நெருப்பாக
கனல்கிறது எம் மனங்கள்
நீறுதட்டி நீ சீண்டுகிறாய்.
உறுகளும் விளைவித்து
ஊரவராம் எமையெல்லாம்
உலைக்களமாக்குகிறாய்.
பள்ளிச்சிட்டுக்களை
பயணிக்கும் ஊரவரை
பாதையிலே மோதி கொன்றுவிட்டு
பறந்தோட பார்க்கின்றாய்.
காக்கியுடை வந்து
கண்துடைப்பு நாடகம் செய்கிறது
சமாதானம் எனும் பெயரில்
எத்தனையோ உறவுகளை
சாக்காட்டி
சதிவலையை பின்னுகிறாய்.
அமைதிவழி போராடிய
எம்மீது
அடக்குமுறையை அரங்கேற்றினாய்.
காக்கியுடையின் கண்ணீர்புகையும்
குண்டாந்தடியும்
ஊக்கியாய் உன்பின்னே
உலவுகிறது.
பொறுமைக்கும் எல்லையுண்டு
பொறுமையின் உச்சந்தாண்டி
பொங்கியெழுந்தோம்
கண்மூடித்தனமான
துப்பாக்கி வேட்டுக்களால்
துடிதுடிக்க கொல்கின்றாய்.
இன்னும் நாம் எழுவோம்
இறுதியில்
சன்னமாய் துளைப்போம்.

- வைகை
(யாழ்.பல்கலைக்கழகம்)

# பெண்ணே!



அழகான புடவை கட்டி
நெற்றி முட்ட பொட்டிட்டு
நீளமான கூந்தல் பின்னி,
அதில் பூ வைத்து
எதுவுமே பேசாமல்
தலை குனிந்து
வீதியில் போகிறாள்!

ஜீன்சும் சோட்சும்
உடுத்தி,
பையன் போல வந்து
அங்கே பண்பாடு பேசுறாள்!

கவர்ச்சிப் பொருளாகவும்
விற்பனைக் கடைகளின் விளம்பரமாகவும்
தொலைக்காட்சிக்குள்ளும்
பொருளின் விற்பனையைக் கூட்டும்
உத்தியில்
தன்னை இழக்கிறாள்!

தனக்கு அமையும் வரன்
மருத்துவராகவும், என்ஜினியராகவும்
அல்லது
அரசாங்க உத்தியோகத்தராகவும்
இருக்க வேண்டுமென்று
கூடுதலான பணத்தினை சீதனமாகக்
கொடுத்தும்
நிறைவு பெறாத திருமண வாழ்வில்
தன்னை இணைக்கிறாள்!

காதல் வாழ்வானது
கூடுதலான எதிர்பார்ப்பிலும்
ஏமாற்றப்பட்டு தவிர்க்கின்ற போது
துணையாக யாருமில்லாமல்,
அவப் பெயரினை உண்டாக்கியிருக்கிற
சூழலில்
எப்படி வாழ்வதென்று
தன்னை வெறுக்கிறாள்!

பெண்ணுக்கு வீட்டில் பாதுகாப்பு
தெருவில் துன்பங்களை கொடுக்கின்ற
சூழலில் தான்
பாதுகாப்பு இல்லாமல்
போய்விடுகிறாள்!

விடுவிக்கப்படாத நாட்களில்
விடுதலைக்கான தேடல், ஆரம்பமாகி
நகர்ந்து கொண்டிருக்கும்
பயணத்தில்
பெண்கள் போராட்டத்தில் தான்
தன்னை வெளிப்படுத்தினாள்!

அங்கீகாரம் கிடைக்காமல்
பெண்கள் தங்களை
சாதனையாளர் பட்டியலில் சேர்த்துக்
கொண்டவர்கள்.

மேல் பூச்சுப் பூசி
வேசம் போட்டு, தங்களின்
சுய உருவத்தை மறைத்துக்
கொண்டவர்கள்.

துன்பமோ இன்பமோ
எல்லாவற்றிற்கும் தலையாட்டி
அடுத்து
வாழப் பழகிக் கொண்டவர்கள்
இன்று துப்பாக்கி ஏந்திய பெண்
புன்னகையை வெளிப்படுத்தினாள்!

– பிரியா.

# நூல்அகம்



நூலின் பெயர் – 'மல்லிகை' (40 ஆவது ஆண்டு மலர் – ஜனவரி 2005)
நூலின் ஆசிரியர் – டொமினிக் ஜீவா
அட்டைப் படம் – ஓவியர் ரமணி
விலை – 150/=

எல்லா வகையான நூல்களையும் வாசித்து விளங்கிக் கொண்டு நாலுபேரிடம் கலந்தாலோசித்துவிடை காணல், அதன் பின் தெளிவுபடுகின்ற சிந்தனைகள் எந்த நூலுக்கான அணிந்துரைக்கும் உதவுகிறது. எல்லோரும் படிக்கின்ற சூழலில் ஒரு புத்தகம் கூடுதலான வரவேற்பினைப் பெறின் அந்த நூலின் வாசகர் வட்டம் கூடியிருக்கின்றபோது அந்த நூல் வர வேற்ப்பினைப் பெறுகிறது. அதேபோல 'மல்லிகை' இலக்கிய ஏடும் பல வருடங்கள் தாண்டி இன்று 40 ஆவது ஆண்டின் ஆண்டு மலராக சிறப்பாக வெளிவந்திருக்கிறது.

இந்த நூலின் உள்ளே சிறுகதைகள், கவிதைகள், மொழி பெயர்ப்பு சிறுகதைகள், ஆய்வுக் கட்டுரைகள், இலக்கியக் கட்டுரைகள், விவரணத்திரைப்பட விமர்சனம், நாடக அனுபவம் என்று 175 பக்கங்களில் அமைந்திருக்கிறது.

நூலின் கருத்தாழம் படிப்பவருக்கு அப்பாற்பட்டு, தன்னிடத்தேயில்லாமல் சிந்திக்க வேண்டும். அப்பொழுது தான் நடு நிலமையில் விளங்கிக் கொள்ள முடிகிறது. ஒருவர் எழுத்து நடைப்போக்கு மற்றையவரிடம் இருக்க முடியாது. ஆனால், ஒரே மாதிரி நடை காணப்படுவது போல் எழுத்து அமைவதால் எழுத்தாளர் ஒருவர் ஒருவரிடம் ஒப்பிட்டுப்பார்க்கிறார்.

எழுத்து நடைகள் ஆழமாகப் பார்க்கிற போது தான் ஒவ்வோர் எழுத்தாளரின் எழுத்து நடை வித்தியாசமாக தெரிகிறது. இந்த நூலின் எழுத்தாளர்களின் எழுத்து நடை வித்தியாசமாகவும், கருத்தொட்டியதாகவும் தெரிவு படமுடிகிறது.

மானுட நேசிப்பு – எழுத்தில் மட்டுமே தெரிவதல்ல. மானுட நேசிப்பை எழுத்துக்கு மட்டு மேயானதாக ஓரம் ஒதுக்கிறவர்கள் இருக்கிறார்கள். கூடவே பேச்சிலும் இணைத்துக்கொள்வார்கள். அது எல்லாச் செயற்பாடுகளிலும் வெளிப்படுவது என்பதை 'மல்லிகை' மூலம் ஆசிரியர் டொமினிக் ஜீவாவிடம் காணமுடியும். மல்லிகை இனிமேலும் சிற்றிலக்கிய ஏடு அல்ல. இலக்கிய ஏடு என்று பா. செயப்பிரகாசம் சொல்லியிருப்பது எழுத்தாய்ச் சேர்த்து மல்லிகைக்கு கனம் தந்திருக்கிறது.

---

நூலின் பெயர் – 'நீரலைகள்' (குறுநாவல்)
ஆசிரியர் – வல்வை ந.அனந்தராஜ்
ஓவியம் – பயஸ்
விலை – 80/=
முதற் பதிப்பு – 2003 ஜனவரி



எல்லோர் வாழ்விலும் ஒவ்வொருவிதமாக நகர்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கையானது – துன்பங்களும், இன்பங்களும் நிறைந்து காணப்படுகின்ற போதுதான் பயன் உள்ளதாக வாழவேண்டும் என்ற நம்பிக்கை எல்லோரிடமும் ஏற்படுகிறது. நாம் நினைக்கிறோம் அது நடந்து விடவேண்டும் என்று ஆனால் வேறு ஒன்று நாம் நினைப்ப தற்கு எதிராக நடந்து விடுகிறபோது மனம் சலிப்படைகிறது . சலிப்படைந்தாலும் மீண்டும் எழுந்து கொண்டு பழகிக் கொள்ள முடிகிற வாழ்வில் பல கட்டங்களைத் தாண்டி நகர்ந்து கொண்டிருக்கிறது.

'நீரலைகள்' என்ற நூலும் வாழ்க்கை ஓட்டத்தில் ஒரே மாதிரித்தான் ஓடிக் கொண்டிருக்கிறது. ஆனால் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக இருக்கிற போதுதான் அதை கதையாக்கி விடுகிறோம். அந்த வகையில் ஒரு குடும்பத்தின் கதை தான் நீரலைகளின் ஓட்டமாக திகழ்கிறது.

வாழ்க்கையில் வந்து சேருகின்ற உடைமைகள் எமக்கு சொந்தமானவையல்ல அது ஒரு குறிப்பிட்ட காலம் வரை எங்களுடன் இருக்கிறது. பின்பு வேறொருவர் ஆகிவிடுகிறது. இதை நாங்கள் உணர்ந்து கொண்டால் அளவுக்கு அதிகமாக ஆசைப்படவேண்டிய தேவையில்லை.

வாழ்வில் எல்லோரும் முதியவர்களாகி விடுவது தான் கடைசி வாழ்க்கை. ஆனால் முதியவர் ஆனதும் ஒதுக்கி விடுகின்ற சமூகம் இன்றும் இருக்கின்ற போது அடுத்த தலை முறைகளுக்கும் காவு கொண்டே இந்தப் பிரச்சினை செல்கிறது.

இளமைக் காலத்தில் வசதியாக வாழ்ந்த போது உள்ளவற்றையெல்லாம் தமது பிள்ளைகளுக்குச் சீதனமாக வாரி இறைத்துவிட்டு முதுமையடைந்ததும் அதே பிள்ளைகளால் தெரு வீதிக்குத் தூக்கி யெறியப்பட்ட நிலையில் அத்தகைய வயோதிபத் தாய்மாரும், தந்தையர்களும் படுகின்ற அவலங் களையும், துன்பங்களையும் நேரில் பார்த்து அனுபவிக்கும் பொழுது மனித உறவுகளின் நிலையற்ற தன்மையைத் தான் உணரமுடிகிறது.

நெஞ்சத்தை நெகிழவைத்த அந்த உணர்வுகளின் உந்துதலால் எழுந்ததே இந்தக் குறுநாவல்.

– இலக்கியன்.

---



நூலின் பெயர் – அரங்கியற் கட்டுரைகள்
நூலாசிரியர் – கந்தையா ஸ்ரீகந்தவேள் M.Ed
வெளியீடு – தெஸ்பியன் கலை வட்டம் இணுவில்
விலை – ரூபா 200/=

யாழ்ப்பாணத்தில் நாடகக் கலை வளர்ச்சி பெற்றிருந்த போதிலும் அது சம்பந்தமான புத்தகங்கள் வெளிவந்தது மிகவும் அரிது. ஏனைய துறைகளாகிய கவிதை, கட்டுரை, இலக்கியம், குழந்தைப் பாடல்கள், சமயம் போன்ற நூல்களை பலர் வெளியிட்டுள்ளனர். ஆனால் கல்விப் பொதுத்தராதரப் பிரிவிற்கு நாடகமும் அரங்கியலும் என்னும் பாடம் அமைந்துள்ள போதிலும் இதுபற்றிய பூரண விளக்கமுடைய நூல்கள் போதுமான அளவு வெளிவரவில்லை. இந்தக் குறை பாட்டிற்கு யாழ்.குடாநாட்டில் இந்தத் துறை சார்ந்த நாடக ஆசிரி யர்கள் பற்றாக்குறையாக உள்ளனர் என்பதும் குறிப்பிடலாம்.

இருந்த போதிலும் இலைமறைகாய் போல ஒரு சிலர் இருப்பதும் உண்மை தான். அந்த வகையில் கந்தையா ஸ்ரீகந்தவேள் எழுதிய 'அரங்கியற் கட்டுரைகள்' என்னும் நாடகத்துறை சார்ந்த நூல் இணுவில் தெஸ்பியன் கலை வட்டத்தால் வெளியிட்டு வைக்கப் பட்டது.

க.பொ.த உ/த வகுப்பு மாணவர்களுக்கு பெரிதும் பயன்படக் கூடிய முறையில் இந்த நூல் தொகுக் கப்பட்டுள்ளது. பண்பாட்டு நடவடிக்கையாக அரங்கு, இலங்கைத் தமிழ் அரங்கு, இலங்கைத் தமிழ் மரபு வழி நாடகங்கள், வசந்தன் கூத்து போன்ற தலைப்புக்களில் அமைந்த கண்ணோட்டங்களும், நாடகங்களுக்கு ஆணிவேராக அமைந்த கலையரசு க.சொர்ணலிங்கம் – அரங்க பங்களிப்பு பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை – நாடகப் பங்களிப்பு கலாநிதி ம.சண்முகலிங்கம் (குழந்தை) ஆகி யோர் நாடகத்துறைக்காற்றிய சேவைகள் பல்கலைக்கழகத் தமிழ் அரங்கு சில குறிப்புகள், அரங்கில் யதார்த்த வாதம் சில சிந்தனைகள் போன்ற அம்சங்களைத் தாங்கி வெளியிடப்பட்டுள்ளது.

நாடகமும் அரங்கியலும் கற்கும் மாணவர்களின் கல்வித் தேடலுக்கு விடையளிக்கும் விதத்தில் நூலாசிரியர் க.ஸ்ரீகந்தவேள் நூலை மிகவும் நுண்மை மிக்கதாக் தொகுத்துள்ளார். கடந்த வருடம் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் இவரால் தாயாரிக்கப்பட்ட 'கருவறையிலிருந்து' என்னும் நாடகம் ஸ்கந்தவரோதய கல்லூரி மாணவர்களால் மேடையேற்றப்பட்டு அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கமும் விருதும் பெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது.

– சி. சந்தானகுமாரசர்மா.

# தேடலும் பகிர்தலும்

## சிறுவர் செந்தமிழ்

ஆண்டுக்கொருமுறை ஆடிப்பிறப்பு சோமசுந்தரப் புலவரை நினைவு கூரவைக் கிறது. இப்போதய சிறுவர் சிறுமியரி டையே புலவருடைய அந்த 'ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை' பாடல் மட்டுமே ஓரளவு அறியப்பட்டிருக்கிறதென்றாலும், அவரு டைய பாடல்களில் மிகப்பல அந்தக் காலத் துத் தமிழ்ப் பாடப் புத்தகங்களில் இடம் பெற்று அதன்மூலம் பிள்ளைகளின் மனதிலும், வாயிலும் கூட இடம்பிடித்திருந் தன.

ஐம்பதுகளில் பாடப்புத்தகங்களாக இருந்த பாலபாடம், பாலபோதினி, ஈழவாச கம், உமாவாசகம் என்ற இன்னோரன்ன நூல்களிலிருந்த புலவரின் ஆக்கங்களான 'தாடியறுந்த வேடம், பவளக்கொடி, ஆடிப்பிறப்பு, கொழுக்கட்டைப் பொன்னன், ஆடு கதறியது, ஏறாத மேட்டுக்கிரண்டு துலை, கதிர்காமம்' போன்ற பாடல்கள் மாண வரின் விருப்புக்குரியவையாக விளங்கி வந்தவை.

இந்தப் பாடல்கள் யாவையும் உள்ளடக் கிய தொகுதி 'சிறுவர் செந்தமிழ்' என்ற தலைப்பில் இற்றைக்கு அரை நூற்றாண் டுக்கு முன் ஏப்ரல் – 55 நந்தன, பங்குனி – யில் வெளியாயிற்று. இதனைப் பதிப்பித்தவர் கள் சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த சி.ஜே.இளையதம்பி மற்றும் உடுவில் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த சோ.இளமுரு கனார். நூல் அச்சிடப்பட்டது – யாழ்ப்பாணம் அருட்சூசை மா முனிவர் அச்சகத்தில்.

'ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுக ளுக்கு முன்னரே நவாலியூரிலே பனை யோலைகளால் வேய்ந்த ஓர் அழகிய சிறு குடிலின் முற்றத்திலே தண்ணார் திங்கள் வெண்ணிலாப் பொழியத் தாழஞ்சோலை யிற் றழைத்த தென்றல் மெய்வருடி வியர்ப்பு நீக்க.....' என்று பதிப்புரை தொடங்குகின்ற போது பழைய வாசகன் ஒருவனிடத்து அவனை யறியாமலே பெருமூச்சுத் தோன்றுவதற்குப் பல காரணங்களிருக்கலாமென்று தோன்று கிறது.

'பல்லாண்டாக புலவர்க்குற்ற தொய்வு நோய்க்கு விலையுயர்ந்த அருமருந்துதவி, நோயொடு முதுமைத் தளர்வையும் நீக்கி வருகின்ற சுதுமலைச் செழும்பதி வைத்திய சிரோன்மணி நாகலிங்கம் அண்ணாமலை அவர்களுக்கு' ஆக்கியோனால் 'உரிமை யாக்கப்பட்டுள்ள' (இப்போதைய வழக்கில் 'சமர்ப்பணம்') இப் பனுவலுக்கு அணிந்துரை எழுதியிருப்பவர் அப்போதைய யாழ்ப் பாணத்து திருநெல்வேலி சைவாசிரியர் கல்லூரித் தலைமை தமிழ் பண்டிதரும், விரிவுரையாளருமாகிய பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள்.

சிறுவர்களை விழித்துப் பேசும் பாங்கில் அமைந்த இந்த அணிந்துரை, அவர்களின் வீச்சுக்கு அப்பாற்பட்டதாக பல இடங்களில் அமைவது போல தொகுப்பின் பாடல்களிற் சிலவும்; சிலவற்றில் சில இடங்களும் கூட அமைந்திருப்பதும் கண்கூடு. பாடல்களைப் பொறுத்தளவில் விமர்சனத்துக்குரிய – எதிர்மறை – கருத்துக்கள் ஓரிரு இடங்களில் தென்பட்டபோதும் பதிப்புரையில் அவ்வா றானவை சற்று அதிகமாகவே தம்மை இனங்காட்டுகின்றன.

எவ்வாறிருப்பினும் காலம், சூழல், தேவை என்பவற்றின் பின்னணியில் நோக் குகையில் – 32 பாடல்கள் கொண்ட இந்தத் தொகுப்பில் – மூன்றில் ஒரு பங்கு நிச்சய மாக புலவருக்குப் பெருமை சேர்ப்பன. அவற்றில் குறிப்பிடத்தக்கவை எழுதி முக்கால் நூற்றாண்டின் பின்னரும் கூட தம் பொருத்தப்பாடும் பெருமையும் குன்றாதுள் ளன. முக்கியமாக 'செந்தமிழ் தாய்' இன் றைக்கு எம்மால் பயிலப்படவேண்டிய ஒன்று தான். 'அருமந்த தமிழினை யறியாது கெட்டோம்'– எனப் பலவாறாக அங்கலாய்க் கிற பாடல் இவ்வாறு நிறைவு கொள்கிறது:

இரவு விடிந்தது கேளீர் – தமிழ்
இளவள ஞாயி றெழுந்தது பாரீர்
பரவுதற் கோடிநீர் வாரீர் – வந்து
பணிமின்கள் படிமின்கள் பயமில்லைப்
பாரீர்.

முக்கியமாகக் கருத்திற் படுகிற இன்னு மொன்று என்னவென்றால் – 138 பக்கங்கள் கொண்ட இந்நூலில் எண்ணி எட்டே எட்டு எழுத்துப்பிழைகள் மட்டும்தான். அவற் றிற்குக்கூட பின்னட்டையின் உட்புறத்தில் திருத்தம் போட்டிருக்கிறார்கள்.

- சாந்தன்.

# கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பெரும் ஆளணிப்பற்றாக்குறை நிலவுகிறது

## கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார வைத்திய அதிகாரி



கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் மக்கள் வாழ்ந்துவருகின்றனர். இந்த மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் மிகவும் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றனர்.

70 வைத்தியர்கள் கடமைபுரிய வேண்டிய இடத்தில், 20 இற்கும் குறைவான வைத்தியர்களே கடமை புரிந்துவருகின்றனர். இந்த வைத்தியசாலைகளில் வைத்திய ஊழியர்கள் பற்றாக்குறையால், சுகாதாரத் தொண்டர்கள் மூலமே மக்களுக்கான அன்றாட சுகாதார சேவைகளை ஓரளவு பூர்த்திசெய்துவருகிறோம் என - கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

சுகாதாரத் தொண்டர்களின் உதவிக் கொடுப்பனவுகள் தொடர்பாக யுனிசெப் செயலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஒன்றுகூடலின்பின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுகாதார திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளில் 257 சுகாதார உதவியாளர்கள் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குப் பின்னர் கொடுப்பனவுகள் ஏதுவுமின்றி கடமையாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்குச் சில சமயங்களில் சிறுதொகைப்பணம் வழங்கியிருக்கிறோம். அதைவிட தற்போது மாதாந்த உலர் உணவுகள வழங்கப்படுகின்றன.

எமது பகுதியில் சுகாதார ஊழியர்கள், வைத்தியர்கள், தாதியர்கள், மருத்துவ மாதர்கள் மருந்துக் கலவையாளர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள் எனப் பல்வேறு மட்டத்திலும் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை காணப்படுகிறது. இந்தப் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்வதற்கு இந்தச் சுகாதார உதவியாளர்களே நீண்டகாலமாக உதவி புரிந்து வருகிறார்கள்.

எனவே, இந்தத் தொண்டர்களின் தேவையை கருத்திற்கொண்டு, சிறு தொகைக் கொடுப்பனவை வழங்குவதற்கான நடைமுறைகள் தொடர்பாக ஆராயப்பட்டது. அதன்படி இனிவரும் காலங்களில் இந்தத் தொண்டர்கள் இடைவிலகிப்போனால், அவர்களுக்கு எவ்வாறான உதவிகள் செய்வது என்பது தொடர்பாகவும், இவர்களுக்கான சிறுதொகைக் கொடுப்பனவுகளை எந்தெந்த நிறுவனங்கள் ஊடாகப் பெற்றுக் கொள்வது என்பது தொடர்பாகவும் முடிவெடுக்கப்பட்டது.

இந்த முடிவுகளின்படி இந்த சுகாதார உதவியாளர்களுக்கு மாதாந்த உதவித்தொகையாக 4 ஆயிரம் ரூபா வழங்குவதற்கு முடிவெடுத்துள்ளோம். அத்துடன் இடைவிலகிப்போகும் ஒரு சுகாதார உதவியாளருக்கு ஒரு குறிப்பிட்டளவு கொடுப்பனவை - கொடுப்பனவாக வழங்காது, ஒரு சுயதொழில் ஆரம்பிப்பதற்குரிய வளங்களைச் செய்து கொடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது சுகாதார உதவியாளர்களாகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் வேளையிலேயே, அவர்கள் தங்களுடைய வீட்டில் தங்களுடைய பொருளாதாரத்தை வளப்படுத்தக்கூடிய வகையில் அவர்களிடம் இருக்கும் திட்டத்துக்கேற்ப உதவியைப் பெற்றுக் கொடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

போரினால் பாதிக்கப்பட்ட இந்தப் பிரதேசத்துக்கு சம்பந்தப்பட்டவர்கள் விசேடமான கவனத்தைச் செலுத்தி, ஆளணிப் பற்றாக்குறை, கட்டடப் பற்றாக்குறை ஆகியவற்றை நிவர்த்திசெய்து ஏனைய திட்டங்களை முன்வைத்தால் மாத்திரமே - இந்தப்பகுதி மக்கள் உண்மையான சுகாதார வசதிகளைப் பெற்றவர்களாகக் கருதப்படுவர் எனத் தெரிவித்தார்.

தொண்டர்கள் 10 வருட காலமாகக் கடமையாற்றியும் அவர்களுக்கான நிரந்தர நியமனம் பெற்றுக்கொடுப்பது தொடர்பாகக் கேட்டபோது -

இந்தத் தொண்டர்களுக்கு தராதரம் இன்மையால் இவர்களில் குறிப்பிட்ட அளவினரை சிற்றூழியர்களாக உள்வாங்குவதற்கான முயற்சியை மாகாண சுகாதார அமைச்சு மேற்கொண்டு வருகின்றது. எனினும், இந்த 257 தொண்டர்களையும் சிற்றூழியர்களாக உள்வாங்கமுடியாது. இவர்களில் ஒரு தொகுதியினரையே உள்வாங்கலாம் எனத் தெரிவித்தார்.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் கருத்துத் தெரிவிக்கையில் -

மத்திய அமைச்சு, மாகாண அமைச்சுக்களுடன் இங்கு செய்யப்படவேண்டிய தேவைகள் கருதி, இங்குள்ள தொண்டர்களை உள்வாங்குவது தொடர்பாக மத்திய மாகாண அமைச்சுக்களுக்கு அழுத்தம் கொடுக்கப்போவதாகவும் தெரிவித்தார். (க)

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் நட்டாங்கண்டல் வித்தியாலயம்!

முல்லைத்தீவு நட்டாங்கண்டல் வித்தியாலயம் அடிப்படை வசதிகளற்ற நிலையில் பெரும் சிரமங்களின் மத்தியில் இயங்கி வருகிறது.

மாந்தை கிழக்கு கோட்டத்துக்குட்பட்ட இந்தப் பாடசாலை தரம் ஒன்று முதல் தரம் 11 வரையான வகுப்புக்களைக்கொண்டு இயங்குகிறது. இதில் 250 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர்.

இதைவிட இந்தப் பாடசாலையில் ஆசிரியர் விடுதிகள் இன்மை, மலசலகூடவசதி, குடிநீர் வசதியின்மை என்பவற்றுடன், விளையாட்டு மைதானமும் புனரமைக்கப்படாமல் காணப்படுகிறது.

அத்துடன் ஆசிரியர் பற்றாக்குறை போன்ற அடிப்படை வசதிகளற்ற நிலையில் இந்தப் பாடசாலை இயங்கிவருகிறது.

நட்டாங்கண்டல் பிரதான வீதியிலிருந்து பாடசாலை செல்லும் வீதி கடந்த 20 வருடங்களுக்கு மேலாகப் புனரமைக்கப்படாது, பாரிய குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.



வன்னிப் பதிவுகள்

# புலிகளின் குரல் நடுவப் பணியகத்தில் கிட்டு நினைவாக சிறப்பு நிகழ்வுகள்

கேணல் கிட்டுவின் 12 ஆம் ஆண்டு நினைவு சிறப்புத்தமிழ்க் கலையரங்கம் புலிகளின் குரல் நடுவப் பணியக அமலன் அரங்கில் எதிர்வரும் வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரேற்றல், ஈகச்சுடர் ஏற்றல், அமைதி வணக்கம், மாவீரர் வணக்க நடனம், வரவேற்புரை, தலைமையுரை, சிறப்புரை ஆகிய நிகழ்வுகளைத் தொடர்ந்து, 2004 ஆம் ஆண்டு மாதாந்த முத்தமிழ்க் கலையரங்கப் போட்டிக்கான சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. தொடர்ந்து "தொடுவானம்" எனும் தலைப்பில் நாடகம் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் நேயர்கள், ஆர்வலர்கள், அனைவரையும் கலந்து கொள்ளுமாறு புலிகளின்குரல் நிறுவனத்தினர் கேட்டுள்ளனர்.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### மார்ச் 07

1919 : பிரிட்டனில் வேலையற்றவர்களுக்கான கருணை ஊதியம் வழங்கப்படத் தொடங்கியது. இதை 8 லட்சம் பேர்பெற்றனர்.

1935: ஷார் பகுதியை ஜேர்மனி தன்நாட்டுடன் இணைத்துக்கொண்டது.

1936 : ஹிட்லரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் முதலாவது கட்டம் அரங்கேற்றப்பட்டது. 1925 ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட லோகார்னோ ஒப்பந்தத்தை மீறி, ஜேர்மனி - ரைன் நதிப் பிரதேசத்தை மீண்டும் ஆக்கிரமித்துக் கொண்டது.

1941 : பிரிட்டிஷ் படைகள் எதியோப்பியாவைக் (அபிசீனியாவைக்) கைப்பற்றின.

1954 : காபன் செப்பொக்சைட்டைக் கண்டுபிடித்தவரும், 1950 ஆம் ஆண்டின் இரசாயனவியலுக்கான நோபல் பரிசு பெற்றவர்களுள் ஒருவருமான ஜேர்மனியைச் சேர்ந்த விஞ்ஞானி ஓட்டோபால் ஹெர்மன் டயல்ஸ் மரணமானார்.

1981 : கலிபோர்னியாவில் ஸ்டார்ன் போர்ட் என்ற இடத்தில் பேராசிரியர் நார்மன் ஷம்வே என்பவரால் இதயம், நுரையீரல் மாற்று சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

1990 : பல மொழிகளில் புலமை பெற்றவரும், இந்தியாவின் ராஜராஜன் விருதுபெற்றவருமான கவியோகி சுத்தானந்தபாரதி மரணமடைந்தார்.

1993 : இந்தியாவின் ஹிமாச்சல பிரதேசத்தில் மூராஸ் பகுதியில் மிக மோசமான நிலநடுக்கம் ஏற்பட்டது.

தொகுப்பு - சந்துரு

# மனிதனின் ஆளுமை விருத்திக்கு முகாமைத்துவ கல்லூரி இன்றியமையாதது

## தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்டமிடல் பணிப்பாளர்

(கிளிநொச்சி)

முகாமைத்துவக் கல்லூரிகள் ஒவ்வொரு மனிதனுடைய ஆளுமை விருத்திக்கும், ஒரு தேசத்தின் அபிவிருத்திக்கும் இன்றியமையாதனவையாகவே திகழ்கின்றன என - தமிழர் புனர்வாழ்வுக்கழகத் திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி தெரிவித்தார்.

கிளிநொச்சியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் நிறுவப்பட்ட கணக்கியல் தொழில்நுட்ப முகாமைத்துவக் கல்லூரி நேற்று முன்தினம் மாலை 2 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த முகாமைத்துவக் கல்லூரியிலுள்ள மாணவர்கள் அனைவரும் இந்தக் கல்லூரியின் நோக்கத்துக்கமைவாகக் குறிப்பிட்ட காலவரையறைக்குள் கல்லூரிப் பாடநெறிகளைக் கற்பதன்மூலம், எத்தகையதொரு வேலைத்திட்டச் செயற்பாடாக இருப்பினும் ஒரு தனித்துவமான ஆளுமைமிக்கவராக உருவாக்கம் பெறமுடியும். எனவே, இதுபோன்ற முகாமைத்துவக் கல்லூரிகள் மேன்மேலும் துறைசார்ந்த ரீதியாக அமைக்கப்பெற்று எமது தேசத்தினதும், சமூக பொருளாதார அபிவிருத்திக்கும் வலுவூட்டவேண்டுமென்ற எண்ணக்கருவோடு எல்லோரும் ஒன்றிணைந்து பணியாற்றவேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு புனர்வாழ்வுக் கழகத்தன் கணினித் தொழில்நுட்பவியல், இணையத்தள இணைப்பாளர் பிரபுவின் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை கிளிநொச்சி கந்தசாமி ஆலய பிரதமகுருக்களான ரெட்ணேஸ்வராக் குருக்கள், முகாமைத்துவக் கல்லூரியின் ஆசிரியர்களில் ஒருவரான அருள்நாதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியை சுனாமி பேரலை அனர்த்த துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவை நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர்களில் ஒருவரான வின்சன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து முகாமைத்துவக் கல்லூரியின் அலுவலகத்தைத் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் துணை நிறைவேற்றுப் பணிப்பாளர் ரீகன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

வகுப்பறைகளில் ஒன்றை சிறுவர் நலத்திட்டப்பணிப்பாளர் ரவி திறந்து வைத்தார். இரண்டாவது வகுப்பறையை தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி திறந்துவைத்தார். இதையடுத்து ஆசியுரையும், சிறப்புரையும் இடம்பெற்றன.

### ஐஸ்கட்டி பாவனைக்குத் தடை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உணவுத் தேவைகளுக்காக ஐஸ் கட்டிகள் பயன்படுத்துவது தற்காலிகமாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. தற்பொழுது தொற்று நோய்கள் ஏற்படும் அபாயநிலை காணப்படுவதால்,உணவுத் தேவைகளுக்கும், பானம் தயாரிப்பதற்கும் ஐஸ் கட்டிகள் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ சுகாதார சேவையாளர் தெரிவித்துள்ளார்.



நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் நிறுவப்பட்ட கணக்கியல் தொழில்நுட்ப முகாமைத்துவக் கல்லூரி திறப்பு விழா நிகழ்வில் முதலாவது வகுப்பறை ஒன்றை சிறுவர்திட்டமிடல் பணிப்பாளர் ரவி திறந்துவைப்பதையும், இந்தக் கற்கைநெறியைப் பயிலவுள்ள மாணவர்களையும், நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்*
*நட்பாம் கிழமை தரும்.*

*திருக்குறள்*

# நமது நோக்கு

## ஆபத்தான அமெரிக்க இராணுவ உதவிகள்...

பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டி 'ஆராரோவும்' பாடும் அமெரிக்காவின் அரசியல் இராணுவ அணுகுமுறை உலகப் பிரசித்தமானதாகும்.

எந்தக் காலத்தில், எந்த நேரத்தில், எந்தச் சூழலில் எத்தகைய அணுகுமுறையை, எந்த நாட்டில் மேற்கொள்வதென்பதும் - அதன் மூலம் எத்தகைய அரசியல் மற்றும் இராணுவ ரீதியிலான அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ள முடியுமென்பதும் அமெரிக்க அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் எப்போதோ தீர்மானிக்கப்பட்டு, அவ்வப்போது மெருகுப்படுத்தப்பட்டு தேவைப்படும் போது நிறைவேற்றி நடைமுறைப்படுத்தக்கூடிய வகையில் வரையறை செய்துகொள்ளப்பட்டதேயாகும்.

தன்னை எப்போதுமே சர்வதேசத்தின் பாதுகாவலனாக - அதாவது, பொலிஸ்காரனாக தானே நியமித்துக் கொண்டு வலம்வரும் அமெரிக்க அரசு, சர்வதேச ரீதியில் தமது தேவைகள் - அபிலாஷைகளை உலகநாடுகளிலிருந்து நிறைவுசெய்வதற்கு சாம - பேத - தான - தண்ட அணுகுமுறைகளைப் பயன்படுத்தத் தவறுவதுமில்லை...

ராஜதந்திரம், இராணுவ தந்திரம் என சகல தந்திரோபாயங்களையும் தனது தேசிய நலன்களுக்கேற்ப, எந்த நாடுகள் மீதும் பயன்படுத்தத் தவற பின்நிற்காத அமெரிக்க அரசின் நடவடிக்கைகள் எப்படியிருக்கும் என்பதற்கு வியட்னாம் முதல் ஈராக் வரையிலான சகல நாடுகளின் வரலாறுகளும் சான்றுபகரும்.

பொது நியாய, அநியாயங்கள் குறித்து அமெரிக்காவின் பார்வை என்பது, அமெரிக்க ஜனநாயகத்தின் விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையிலேயே அமைந்துவந்துள்ளமை ரகசியமான விடயமல்ல.

இலங்கை விவகாரங்களிலும் அமெரிக்க அணுகுமுறைகள் எப்படியெல்லாம் நிகழ்வுகளை ஏற்படுத்தி வந்துள்ளன என்பதற்கு - இந்து சமுத்திரப் பிராந்தியம் மீதான அமெரிக்காவின் அக்கறை தொடர்பான, தேவைகள் தொடர்பான - இராணுவ நலன்களைக் குறிக்கோளாகக் கொண்ட திட்டங்களே சான்றாகும்.

அமெரிக்கா எந்த நாட்டிலும் ஆளும் அரசுகளுக்கு அனுசரணையான நிலைப்பாட்டை எடுத்து, அந்த நாட்டைத் தனது கைக்குள் போடுவதே வழக்கமாகும். எப்போதாவது, எங்காவது அது சாத்தியப்படும். அசாத்தியமென தென்படுகையில், இத்றகு மாறான வேற்று வழிகளையும் அது கையாளத் தயங்குவதும் கிடையாது. அந்த வழிகள் நியாயமற்றவையாக, வெளிப்படையாகத் தெரிந்தாலும் அதனை நியாயப்படுத்த, நியாமற்ற காரணிகளையும் முன்வைக்கத் தவறுவதும் கிடையாது.

அமெரிக்காவின் சர்வதேச ஆளுமைப்பலமானது - பன்முகப்பட்ட அளவில் பலவீனமான நாடுகளை தேவைக்கேற்ப பணியவைப்பதில் இன்னும் விளக்கமாகச் சொல்வதானால் - தனக்கு 'ஜால்ரா' போடவைப்பதில் பெருமளவில் வெற்றி பெற்றுள்ளதன் காரணமாகவே உலகில் ஜனநாயக தர்மம் என்பது தனது பெருமைமிகு அர்த்தத்தினை இழந்து போயுள்ளது என்றால் அது உண்மையே.

மேலாதிக்க சிந்தனையுடன் கூடிய எந்த நாட்டினதும், அரசினதும் செயற்பாடுகள் நியாயபூர்மானதும், மனித உரிமைகள் சார்ந்ததுமான பல விடயங்களைக் குழிதோண்டிப் புதைத்து வருவது ஒரு சர்வதேச மரபாகவே மாறிவிட்டது.

நியாயம் கேட்கும், நீதியைக் கோரும் சிறுபான்மையினத்தவர் தமது உரிமைகளை தமக்கானதாக ஆக்கிக் கொள்ள அடக்குமுறையைத் தகர்த்து நிமிர்வார்களேயானால் அதற்கு பயங்கரவாதச் செயல் என முத்திரை குத்தும் மூர்க்கத்தனம் ஜனநாயக தர்மம் ஆகாது.

உலகளாவிய ரீதியில் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இலங்கைக்கான இராணுவ உதவிகளை அதிகரிக்க அமெரிக்காவின் புஷ் நிர்வாகம் திட்டமிட்டிருப்பது ஒன்றும் வியப்பான விடயமல்ல. அமெரிக்காவின் 'சுயம்' வெளிப்படும் கட்டம் இதுவேயாகும்.

அதிகரிக்கப்படவுள்ள இலங்கைக்கான நிதியுதவிகளில் இலங்கைக்கு தேசிய மற்றும் பிராந்திய ரீதியில் கடற்பகுதிகளில் பயங்கரவாதக்குழுக்களால் விடுக்கப்படும் அச்சுறுத்தலை எதிர்கொண்டு, சமாளிக்குமளவிற்கு இலங்கைக் கடற்படையை பலப்படுத்திக் கட்டியெழுப்ப முன்னுரிமை வழங்கப்படவுள்ளதாம்.


இலங்கைக்கான எந்த நாட்டினதும் நிதியுதவியானது - ஆயுதப்படைகளைப் பலப்படுத்த பயன்படுத்தப்படுமேயானால், அது இலங்கை அரசை சமாதானப் பாதையில் இருந்து விலகி - போரைநோக்கி வழிநடத்தல் செய்யவே வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

சமாதானத்தை வலியுறுத்திவரும் அமெரிக்கா, இலங்கைக்கு இராணுவரீதியிலான உதவிகளை அதிகரிக்க முன்வந்திருப்பது முரண்நகையான விடயமாகும். இது இலங்கையின் அமைதிமுயற்சிகளுக்கு ஆபத்தை விளைவிப்பதுடன், அமெரிக்காவின் சமாதானம் குறித்த வலியுறுத்தல்களையும் சந்தேகிக்கவே வைக்கும்.

தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளிவிட்டு வேடிக்கைபார்த்தபடி சமாதான ஆராரோ பாடும் தனது பாரம்பரிய அணுகுமுறையை அமெரிக்கா மாற்றாவிடின், அது இலங்கையின் அழிவுக்கு வழிவகுப்பதாகவே அர்த்தப்படும்.

*அமெரிக்கா அத்தகைய வரலாற்று தவறைச் செய்ய முன்வராது என நம்புவோமாக...*

## நாடும் நடப்பும்




செய்தி:- இலங்கைக்கு இராணுவ உதவிகளை அதிகரிக்கவும் கடற்படையை பலப்படுத்தவும் அமெரிக்கா திட்டம்.

'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# முன்னர் படித்த பாடத்தை படைத்தரப்பும் மறக்கலாமா?

விடுதலைப் புலிகள் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்களல்லர். அவர்கள் ஜனநாயக வாதிகளல்லர். அவர்களுக்கு சுயாட்சியும் கிடையாது. சுனாமிப் பேரழிவு நிவாரணத்தில் பங்கும் கொடுக்க முடியாது என்று மக்கள் விடுதலை முன்னணி என்ற ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்திருக்கிறார். இதனால்தான் சுனாமிப் பேரழிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு விடுதலைப் புலிகளையும் சேர்த்து அரசாங்கம் பொதுக்கட்டமைப்பு ஒன்றை அமைப்பதில் முட்டுக் கட்டை ஏற்பட்டிருக்கிறது.

ஜே.வி.பியின் இந்த முரண் காரணமாக பொதுக் கட்டமைப்பு உருவாக்க முடியாமலிருக்கிறது என்று பரமசிவம் சொன்னார். ஆனால், ஜே.வி.பிக்கு செருப்பால் அடித்தது மாதிரி உலக வங்கி ஆறு பில்லியன் ரூபாய்களை (100 மில்லியன் ரூபாய் ஒரு பில்லியனுக்குச் சமம், ஒரு மில்லியன் ரூபாய் பத்து லட்சம் ரூபாய்க்கு ஈடாகும்). விடுதலைப் புலிகளின் நிர்வாகத்திலுள்ள வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு புனரமைப்புக்காக கொடுக்கத் தீர்மானித்திருக்கிறதாம். தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின்கீழுள்ள பகுதிகள் என்று ஒரு பகுதி உத்தியோகபூர்வமாகவே பிரகடனப்படுத்தப் பட்டிருக்கிறது. அது ஒரு உத்தியோகபற்றற்ற அரசாகவே விளங்குகிறது. போர் நிறுத்த ஒப்பந்தத்தில் விடுதலைப் புலிகளும் கைச் சாத்திட்டிருக்கின்றனர். இதனால் அவர்களும் அரசுடன் பங்காளிகளாகவே கருதப்படுகின்றனர். விடுதலைப் புலிகளுடன் பேசாமல் அல்லது அவர்களை ஒரு பங்காளிகள் என்று ஏற்காமல் வடக்கு - கிழக்கில் எவரென்றாலும் அது அரசாங்கமாகஇருந்தாலும் வெற்றிகரமாக எந்த நடவடிக்கையையும் செயற்படுத்தமுடியாது என்று உலக வங்கியின் பணிப்பாளர் ஹரோல்ட் தெரிவித்ததாக ஆங்கில வாரப் பத்திரிகை தலைப்புச் செய்தியாக வெளியிட்டிருக்கிறது.

தேசப்பற்றுள்ள இயக்கமும், ஊடகங்களும் எனக்கெதிராகக் கண்டனம் தெரிவித்து வந்தாலும் உண்மைநிலை வேறாகத்தான் இருக்கிறதென்று அவர் கூறுகிறார். சுனாமி உதவியாகவும், இடம் பெயர்ந்தவர்களுக்குமாக வடக்கு - கிழக்கில் இந்த உலக வங்கியின் உதவித் தொகை பங்கிட்டுக்கொடுக்கப்படுமாம். இந்த உதவித் தொகை பாதிக்கப்பட்ட மக்களின் தேவையைக் கருதி வழங்கப் படுகிறதேயன்றி அரசியலுக்காகவல்ல. இது மனிதப் பேரழிவு. சுனாமியினால் வடக்கு - கிழக்கில் வீடுகள் அடைந்த சேதமும் மிகப்பெரிது. முழுத்தொகையிலும் போரினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவுவதற்கென ஏழரை பில்லியன் ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறதாம் என்று பின்னர் சொன்னேன்.

நீர் சொல்லும் செய்தியைப் பார்த்தால் ஏற்கனவே சந்திரிகா அம்மையார் மறைமுகமாகப் பல தடவைகள் செருப்பால் அடித்த மாதிரி அமைச்சர்கள் குழுத் தலைவர் டிலான் பெரேரா பொது நிகழ்வொன்றில் செருப்படி கொடுத்தார். என்றாலும், புலிகளுடன் இடைக்கால நிர்வாகம் பற்றிப் பேசினாலோ, நிவாரண உதவியில் பொதுக்கட்டமைப்பு உருவாக்கினாலோ நாங்கள் வெளியேறுவோம் என்று மிரட்டிக்கொண்டிருந்ததுதவிர வெளியேறத் துணிவில்லை. நாங்கள் வெளியேறி விடுவோம் என்று ஒருவர் சொன்னால், நாங்கள் ஏன் வெளியேற வேண்டும். நாங்கள் வெளியேறமாட்டோமென்று மற்றொருவர் சொல்லுவார். ரோஷம் கெட்டு நிற்கிறார்கள் என்றார் பரமசிவம்.

இப்போது வெளியேறினால் தேர்தல் சமயத்தில் அவர்கள் மக்களுக்குக்கொடுத்த வாக்குறுதிகள் பற்றி மக்கள் கேட்பார்கள். பதில் சொல்லமுடியாது. இன்னும் சிலகாலமிருந்து பழியைச் சந்திரிகா அம்மையார் தலையில் போடுவதற்குப் பார்க்கிறார்கள். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தாங்களே பெரும் சேவை செய்ததாகவும் காட்டிக்கொள்ள முயற்சி செய்கிறார்கள். முன்னைய தேர்தல்களில் மக்களின் செல்வாக்கை அதிகம் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

கடந்த தேர்தலில் சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து பெரும்பாலான இடங்களைப் பிடிக்கமுடிந்தது. இப்பொழுது சுனாமி நிவாரண உதவியுடன் பல இடங்களில் மூக்கை நுழைத்துப் பெயர் பெறப்பார்க்கிறது. இதுமட்டுமல்ல. திருகோணமலையில் நகரசபைக் காணியிலும், கொழும்பு முகத்துவாரத்தில் விளையாட்டு மைதானத்திலும் வீடுகள் கட்டிக்கொடுக்க முயற்சி செய்து அதை மக்கள் முறியடித்ததும் புலிகள்மீது பழிபோட்டு பிரசாரத்துக்குப் பயன்படுத்திக் கொள்ள முனைந்தது என்றேன்.

சுனாமி அழிவுக்கு விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து அரசு பொதுக்கட்டமைப்பு அமைப்பதற்கும், இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முதற்படியாக இடைக்கால நிர்வாகத்துக்கு தன்னாதிக்க அதிகாரசபை அமைக்கவேண்டும், இதன் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சு நடத்தவேண்டும் என்ற யோசனைகளை ஜே.வி.பி. எதிர்த்துவருகிறது. இலங்கைக்குவந்த விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கொழும்பு, கிளிநொச்சி, கண்டி, காலி என்று பல இடங்களுக்கும் சென்று பலரையும் சந்தித்துப் பேசியபின் - எதையும் சொல்லாமலே நாடு திரும்பிச் சென்றுவிட்டார். கடந்த மூன்றாண்டு காலப் போர்நிறுத்தம் இலங்கையில் பல்லாயிரம் உயிர்ப்பலிகளை தடுத்திருக்கிறது. மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இயற்கை அழிவினால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கும் போரினால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கும் பரிகாரம் தேடவேண்டும். நோர்வேயின் முயற்சி விரைவில் வெற்றியளிக்கும் என்று சொல்ஹெய்ம் நம்பிக்கை கொண்டிருக்கிறார். சொல்ஹெய்ம் தொடங்கிய பேச்சை கொழும்பிலுள்ள நோர்வேத் தூதர் தொடர்ந்திருக்கிறார்.

கிளிநொச்சியில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனைச் சந்தித்துப் பேசிச் சென்றிருக்கிறார். நாட்டில் மீண்டும் நிரந்தர அமைதியைக் கொண்டுவருவதற்கு நோர்வே பெரும் முயற்சியை இதய பூர்வமாகச் செய்து வருகிறது. போர்நிறுத்தத்தின் பயனை அனுபவிக்கும் தென்னிலங்கை மக்களும், ஜே.வி.பி தலைவர்களும் மீண்டும் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கும், அதன்மூலம் அரசியல் இலாபத்தைப் பெறுவதற்கும் எத்தனிக்கிறார்கள். படைத்தரப்பை சேர்ந்தவர்கள்சிங்கள பௌத்த மேலாண்மை ஊடகங்களை நம்பி நாட்டின் பல இடங்களிலும் குழப்பங்களைத் தூண்டிவிடுவதற்கும் ஈடுபடுகின்றனர்.

சங்கரியார் போன்றவர்கள் கொழும்பில் வசதியான அறைகளிலிருந்து கடிதங்கள் எழுதுவதாக ஊடகங்களுக்கு அறிக்கை விட்டுக்கொண்டிருப்பவர்களால் மக்களல்லவா பாதிக்கப்படுவார்கள். போர்நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கும் விடுதலைப் புலிகளைச் சீண்டி விடுவதில் சங்கரி போன்றவர்களும், படைத்தரப்பைச் சேர்ந்தவர்களும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், ஜே.வி.பியினரும் பெரும் முயற்சிசெய்கின்றனர்.

மீண்டும் ஒரு போர் வந்தால் தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்களுமே பெரும் பாதிப்புக்குள்ளாவார்கள். நாடு பெரும் அழிவைச் சந்திக்க நேரிடும். கதிர்காமரின் முயற்சியால் வெளிநாட்டுப் படைகள் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போரிட படையெடுத்து வரக்கூடுமென சிங்கள ஆங்கில ஊடகங்கள் மாயத் தோற்றத்தை உருவாக்கியிருக்கின்றன.

முன்னரும் வெளிநாட்டு நவீன ஆயுதங்கள், அந்நிய போர்ச் சாதனங்கள், இரவல் முறையில் ஆலோசனைகள் என்று நம்பி வலியப் போருக்கிழுத்துப் படித்த பாடத்தை அம்மையார் மறந்து விட்டார். படைத்தரப்பும் மறந்து விடவேண்டுமா?

## வாசகர் நோக்கு

### வர்த்தமானிக்கு முரணான ஆங்கில ஆசிரியர் நியமனம்!

க.பொ.த. உயர்தர வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி என்பது ஏனைய பிரிவு மாணவர்களுடன் ஒப்பீட்டளவில் மிகவும் குறைாகவே உள்ளது. க.பொ.த உயர்தரத்தில் உயர்ந்த பெறுபேற்றினைப் பெற்றிருந்த போதிலும் பல்கலைக்கழகத்துக்கான வாய்ப்பு அநேகமாணவர்களுக்கு கிட்டுவதில்லை.

இந்தநிலையில், ஆசிரியர் சேவைக்கான 2003 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தலில் க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கிலப் பாடத்தில் சித்தியும் க.பொ.த. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சாதாரண சித்தியும் பெற்றிருந்தால் விண்ணப்பிக்க முடியும். இதன்படி வர்த்தகப் பிரிவு மாணவர்கள் ஆங்கிலப் பாடத்துக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். ஏனைய பாடங்களுக்கு விண்ணப்பிக்க முடியாது. வர்த்தமானியில் கேட்கப்பட்டிருந்த அடிப்படைத் தகுதியுடையவர்கள் போட்டிப் பரீட்சையில் பெறும் புள்ளிகளின் அடிப்படையிலேயே நியமனம் வழங்கப்படுமென்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதன்படி அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடைபெற்றது. ஆனால், வர்த்தமானியில் குறிப்பிட்டபடி வழங்காமல் ஆங்கிலத்தில் அதிவிசேட பெறுபேறு (Distinction) பெற்றவர்களையே சேவையில் ஈடுபடுத்துவதாக புதிய நிபந்தனையை விதித்து போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட வெட்டுப்புள்ளிக்கு மேலாக, அதாவது 160 அதிகமான புள்ளிகளைப் பெற்றவர்களை தவிர்த்துவிட்டு, இதைவிடக் குறைந்த புள்ளிகளைப் பெற்றவர்கள் நியமனம் பெற்றுள்ளார்கள். இந்தநிலையில் கல்வி அதிகாரிகள் புதியபுதிய நிபந்தனைகளை விதித்து செயற்பட்டால் பாதிக்கப்பட்டவர்கள் என்ன செய்யமுடியும்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது சம்பந்தமாக ஒரு நீதியான தீர்ப்பினைப் பெற்றுத் தருவார்களா?

**பாதிக்கப்பட்ட மாணவன்.**

பகுதி - 55 சங்கர்

# காற்றே நீ எம் கதை கேளாயோ... அலையே எம் நிலை உரையாயோ...



திருமலை மாவட்ட அரசியற் துறை நடுவப்பணியகத்தில் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலனைச் சந்தித்தேன். 'சுனாமியைத் தொடர்ந்து தங்கள் நடவடிக்கைகள் எவ்வாறு இருந்தன?' என்ற எனது கேள்வியுடன் எமது உரையாடல் தொடங்கியது.

'சுனாமி அனர்த்தம் ஏற்பட்டதும், எமது அரசியல் வேலைத் திட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சகல போராளிகளையும் அதாவது - எமது கட்டுப்பாட்டுப் பகுதியில் மட்டுமல்லாது, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் நின்ற போராளிகளையும் மீட்புப் பணிகளில் முதலில் ஈடுபடுத்தினோம். இவர்களுடன் எமது இராணுவப் பிரிவுகளில் இருந்த போராளிகளும் இந்தப்பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். உடனடி உதவு வேலைகள் மட்டுமல்லாது - மீட்கப்பட்டோர், பாதிப்புற்றோரை முகாமகளில் தங்கவைக்கும் ஏற் பாடுகளையும் நாமே முதலில் மேற்கொண்டோம். வேறு அரச நிறுவனங்களோ, வேறெவரோ இந்தப் பணிகளில் முதலில் ஈடுபடவில்லை. அதாவது - அரச கட்டுப்பாட்டுப் பகுதியையும் சேர்த்துத் தான் இந்தநிலைமை இருந்தது.

இதில் நாம் சில பிரச்சினைகளையும் சந்திக்க நேர்ந்தது. நகரப் பாடசாலைகள் குறிப்பாக-பிரபல பாடசாலைகளில் இடம்பெயர்ந்தோர் முகாம்களை அமைக்க முயன்ற போது, சில சிக்கல்கள் ஏற்பட்டன. முகாம்கள் அமைந்தால் சில அசௌகரியங்கள் ஏற்படும் என்ற நிலையில் பாடசாலைகளுக்குள்ளே மக்களை அனுமதிக்க மறுத்த நிலையும் இருந்தது. எனினும், நாம் உடனடியாக அதிபர்களைச் சந்தித்து, நிலைமையை விளக்கி, அதிபர்களின் எதிர்பார்ப்புகளுக் கேற்றவாறு நடந்து கொள்வதாக நம்பிக்கையை ஊட்டி திறப்புகளை வாங்கி, முகாம்களை உரு வாக்கினோம்.

மக்களைத் தங்க வைத்தவுடனேயே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் தொடர்பு கொண்டு, பாதிப்புற்றோருக்கு உடனடியா கச் சமைத்த உணவு வகைகளை வழங்க ஏற்பாடு செய் தோம். முதல் மூன்று நாட்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமே உணவு வழங்கியது. தொடர்ச்சியாக இந்த உணவு விநியோகம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் ஏனைய நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டோரின் உதவிகள் கிடைக்க ஆரம்பித்தன என எழிலன் குறிப்பிட்டார்.

'முஸ்லிம் - சிங்கள பிரதேசங்களின் நிலைமைகள் எவ்வாறிருந்தது?' என நான் கேட்டதற்கு 'தமிழ் மக்களின் பிரதேசங்களில் முழுமையாகவும், முஸ்லிம் பிரதேசங்களில் குறிப்பிட்டளவு பிரதேசங்களிலும் உதவி வேலைத் திட்டங்கள் நடைபெற்றன. வெளியில் இருந்து வந்தோர் சிங்கள, முஸ்லிம் பிரதேசங்களில் உதவி களை வழங்கினர். தமிழ்ப் பிர தேசங்களிலும் இவ்வாறான சில உதவிகள் நேரடியாக வழங்கப் பெற்றன. இதற்குள் தமிழருக்கு வந்த உதவிகளைப் படையினர் கைப்பற்றி எடுத்துச் சென்ற சம்பவங்களும் இடம்பெற்றன.

நிவாரண உதவிப் பொருட் கள் கிடைக்கப் பெற்ற நான்கா வது நாள் - எல்லா உதவிப் பொருட்களும் கச்சேரிக்கு கொண்டுவர வேண்டுமென அரசு உத்தரவிட்டது. இதற்கென கந்தளாய்க்கு அண்மையிலுள்ள ஒரு இடத்தில் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டனர். அவர்கள் திருமலைக்கு வரும் நிவாரண வாகனங்களில் ஏறி, வேறு இடங்களுக்கு அவற்றைக் கொண்டு செல்ல முயன்றனர். இவற்றில் சிலவே கச்சேரிக்கு கொண்டு செல்லப்பட்டன. ஏனையவை வேறு இடங்களுக்குச் சென்றன.



இதேவேளை கச்சேரியில் ஒப்படைக்கப்படும் நிவாரணப் பொருட்கள் தொடர்பாகப் பல குழறுபடிகள் நடைபெற்றன. உதாரணமாக - கச்சேரியில் களஞ்சியப்படுத்தி வைத்திருந்த நிவாரணப் பொருட்களில் 3 லொறி சாமான்களை ஒரு பிகுகு ஏற்றிக் கொண்டு சென்றார். உடனடியாக அரச அதிபரிடம் நான் இன்னென்ன இலக்க லொறிகளில் சாமான்கள் ஏற்றிக் கொண்டு செல்லப்பட்டன என்ற விபரத்தைக் கூறினேன். ஆனால் அரச அதிபரோ அவ்வாறான ஒரு சம்பவமே நடைபெறவில்லையெனச் சாதித்தார்.

(தொடரும்...)

உளநலவியல் ஆர். கே. மேனன்

# அடுத்தவர் குறைகளைக் கண்டு பிடிப்பதே எம்மவர் மத்தியில் தற்போது அதிகமாகிவிட்டது

ஒவ்வொரு மனிதர்களிடத்திலும் ஒவ்வொரு பலவீனம் உண்டு. ஏதோவொரு பலவீன மென்றாலும் நிச்சயமாக ஒவ்வொரு வரிடத்திலும் இருக்கும். ஆனால் இந்தப் பலவீனங்களை நாமே சீரமைத்துக் கொள்ளவேண்டும். சீரமைக்க வேண்டிய பலவீனமென்று தெரிந்தும், அதை நாம் சீரமைக்காமல் இருப்பதால் தான் தவறுகள் உருவாகிறது.

இப்படிப்பட்ட பலவீனங்களில் ஒன்றுதான் அடுத்தவர் குறைகளை இனங்கண்டு கொள்வது. இது எமது தமிழ்ச் சமூகத்தில், அதிலும் அதிகமாக யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத்தில் அதிகரித்து வருகின்ற விடயமாகி விட்டது. பொதுவான சில மனித பலவீனங்களும் உண்டு. இதைவிட தனிப்பட்ட சமூகக் கட்டமைப்பால் விஸ்வரூபமெடுத்த மனித பலவீனங்களும் உண்டு. இப்படியாக தனிப்பட்ட சமூகக் கட்டமைப்பால் எழுச்சி பெற்ற ஒரு மனித பலவீனமாக உருவெடுத்துள்ளதுதான் இந்த அடுத்தவர் குறைகளை இனம் கண்டு, அதைப் பலமாக விமர்சிக்கின்ற மனித பலவீனம். இது சாதாரண மனிதர்களிடத்தில் மாத்திரம் தான் காணப்படுகிறது என்று கூற முடியாது. இந்தப் பலவீனம் பெரிய கல்வியாளர்கள், சமயப் பெரியார்கள், சமூக சேவையாளர்களைக் கூட விட்டு வைக்கவில்லை.

முதலில் நாம இப்படிப்பட்ட அடுத்தவர் குறைகளையே கூறிக் கொண்டு இருக்கும் மனித சுபாவத்துக்கான அடிப்படைக் காரணங்களைச் சற்று ஆழமாகப் பார்ப்போம்.

### குறிப்பிட்ட எதிர்பார்ப்பை அடையாத விரக்திப் போக்கால் ஏற்படலாம்.

மனித வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு எதிர்பார்ப்பு உண்டு. இதை அடைய வேண்டுமென்ற ஆதங்கம் ஒவ்வொருவருக்கும் வேறுபடலாம். இந்த ஆதங்கம் என்ற முயற்சியின் பிரதிபலிப்பால் சிலர் வெற்றி பெறுகின்றனர். சிலர் தோற்றுப் போய் விரக்தியடைகின்றனர். இவ்வாறு தோற்றுப் போய் விரக்தியடைகின்ற பிரிவினராய் அடுத்தவர் வெற்றியை ஏற்றுக் கொள்ள முடியாத சுபாவம் அடி மனதில் விஸ்வரூபமெடுக்க ஆரமபிக்கிறது. இந்த ஏற்றுக் கொள்ள முடியாத சுபாவம் அடுத்தவர் குறைகளைத் தேடிக் கண்டறிந்து, விமர்சிக்கின்ற சுபாவத்துக்கு வித்திட ஆரம்பிக்கிறது. இது ஒரு வகையில் மன்னிப்பளிக்கக் கூடிய விடயமாகிறது. ஏனெனில் தோல்வியின் விரக்தி என்பது இவ்வாறான மறுவடிவம் பெறுவது சகஜம்.

ஆனால் வெற்றிபெற வேண்டும் என்ற முயற்சியின் பலனால் வெற்றி பெற்ற வர்க்கத்தினரும் அடுத்தவன் குறைகளைத் தேடிக் கண்டறிகின்றனர். இதற்கான காரணத்தை ஆராய்வோமானால் - இது ஒரு வகை மேல்மதிப்பை எதிர்பார்க்கின்ற செயற்பாடாகும். அடுத்தவர் குறைகளை விமர்ச் சிப்பதன் ஊடாக தனது தராதத்தை மற்றையவர் மேலாகப் பார்ப்பார்கள் என்ற ஓர்அடிப்படை எண்ணக்கரு சிலர் மனதில் புடமிடப்பட்டு இருக்கிறது. இந்த அடிப்படையில் தான் இவர்கள் அடுத்தவரை விமர்சிக்க ஆரம் பிக்கின்றனர்.

### எதிர்வாதம் போடுகின்ற மனப்பாங்கு

இந்த எதிர்வாதம் போடுகின்ற இயல்பு எம்மவர் மத்தியில் பலரிடம் இருப்பதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். இது குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் ஒருவர் தனது சிந்தனையை மற்றையவர்களிடத்தில் வித்தியாசமான விதத்தில் செலுத்துவதற்கூடாகத் தன்னை அடுத்தவர் வித்தியாசமாகப் பார்ப்பார்கள் என்ற ஒரு போலிக் கௌரவத்தை சுயமாக வளர்த்துக் கொள்வார்கள். இந்த எதிர்வாதம் போடுகின்ற இயல்பு சற்றுத் திரிவடைந்து, அடுத்தவர் குறைகளை விமர்ச்சிக்கின்ற தன் மையைத் தோற்றுவிக்கும் இந்த சுபாவங்கள் எல்லாம் அடிப்படையில் ஒரு போலிப் புகழாசையாகவே உருவெடுக்கிறது.

### புகழாசை

ஒவ்வொரு மனிதருக்கும் புகழாசை என்பது உண்டு. இது மனித வாழ்க்கையில் ஓரளவேனும் இருக்க வேண்டும். இல்லையேல் முன்னேற்றம் என்ற முயற்சி இல்லாமல் போய்விடும். ஆனால் நாமோ சில போலிப் புகழாசைகளை விரும்பி வாழ்கிறோம். இது தவறு. சிறிய சிறிய விடயங்களில் எமது கௌரவங்கள் எமது புகழ் உயர வேண்டுமென்று ஆசைப்படுகிறோமே இது தான் பல வீனமென்ற சொற்பிரயோகத்துக்கு வித்திட ஆரம்பிக்கிறது.

எமது தராதரம், எமது ஆற்றல்கள் எமக்குப் போதாது என்று சிந்தித்து, அடுத்தவர்களோடு எம்மை ஒப்பிட்டுப் பார்க்கும் வர்க்கத்தினரே இந்த சிறிய சிறிய புகழாசைகளை விரும்புவர்கள் ஆவர். ஒவ்வொருவரது திறன் விருத்தியும் வேறுபட்டது. எனக்கு ஒரு விடயத்தில் ஆற்றல் இருக்கும். அடுத்தவருக்கு இன்னோர் விடயத்தில் ஆற்றல் இருக்கும். இதற்காக அடுத்தவரோடு ஒப்பிட்டு எம்மையே நாம் தாழவாகப் பார்ப்பதால்தான், இந்த அடிப்படை எண்ணக்கரு உருவாகிறது.

இது பின்பு விஸ்பரூபமெடுத்து, ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் முன்னிலையில் தான் மற்றையவர்களைவிட, முன்னிலையில் இருக்க வேண்டும் என்ற அடிப்படை எண்ணக்கரு மற்றைய வரை விமர்ச்சிக்க ஆரம்பிக்கிறது. இந்த விமர்சனம் தனது நிறைவை மேலாகக் காட்டுவதற்காக மற்றையவர் குறைகளை இனம் காணும் விமர்சனமாக மாறுகிறது.

### இந்தப் பலவீனத்திலிருந்து மாறுவதற்கான வழிகள்

இது ஒரு சமநிலை ஆளுமை வர்க்கத்தினரால் ஏற்றுக் கொள்ள முடியாத மனித பலவீனம். இந்தப் பலவீனத்தில் இருந்து நிச்சயம் நாம் மாறப் பழகவேண்டும். ஏனெனில் எமது சுதந்திரம் எம்மோடு இருக்க வேண்டும். அடுத்தவர் குறைகளை விமர்சிக்க எமக்கு எந்த விதமான அதிகாரமும் இல்லை.

சற்று சிந்தித்துப் பாருங்கள். குறைபாடற்ற மனிதர்கள் என்று இந்த உலகத்தில் யார் உண்டு? ஒவ்வொருவரிடத்திலும் குறிப்பிட்ட விகித நல்ல அம்சங்களும் உண்டு. குறிப்பிட்ட விகித தீய அம்சங்களும் உண்டு. இதன் வேறுபாடுகள் தான் மனிதனை தெய்வமாக்குகிறது. அதே மனிதனை விலங்குகளும் ஆக்கிறது. ஆகவே சற்றுச் சிந்தித்துப் பார்த்தால, ஒரு செயற்பாட்டில் நல்லதைச் செய்கின்ற அதே மனிதன் தான், வேறொரு செயற்பாட்டில் தீமை இழைக்கத் தயாராகிறான். ஆகவே இந்தத் தீமைக்கும், நன்மைகும் வெவ்வேறுபட்ட மனோ பாவங்களும், வெவ்வேறுபட்ட சந்தர்ப்ப சூழ்நிலைத் தலையீடுகளும் காரணமாக இருக்கலாம். இதையெல்லாம் ஆராய்ந்து ஆழமாகத் தீர்க்கமாக விசாரித்தா நாம் விமர்சிக்கின்றோம்? எடுத்த எடுபபில் எத்தனையோ வார்த்தைகளை அள்ளிக் கொட்டுகிறோம். இது எவ்வளவு பாதகமானது என்று சற்று சிந்தித்துப் பாருங்கள்.

ஒரு மனிதன் ஒரு செயற்பாட்டைச் செய்து முடித்து, வெற்றி பெற எவ்வளவோ கஷ்டங்கள், துனபங்கள், தியாகங்களுக்கு உளளாகிறான். ஆனால் நாமோ ஒரு நொடியில் விமர்சித்துக் குறைகளைக் கண்டு பிடிக்கிறோம். இது எப்படி நியாயமானது.

குறைக்குள்ளே வாழ்ந்து எத்தனையோ பிழைகளைச் செய் யும் மனித வர்க்கத்துள் இருக் கும் நாம் - எப்படி அடுத்தவர் குறை களைக் கூறும் அதிகாரம் உண்டு? ...அன்னிய மொழியினரைச் சற்று அவதானித்துப் பாருங்கள். எதை எடுத்தாலும் வாழ்த்துத் தெரிவிக்கின்ற பழக்கம் அவர்களிடம் உண்டு. அடுத்தவரை விமர்சிக்க அவர்களுக்கு நேரம் கிடைப்பதில்லை. ஜப்பானின் தேசிய கதம் 4 வரிகள் தான் ஏன் தெரியுமா? இது இசைக்கக்கூட அவர்களுக்கு நேரமில்லை. தன் முயற்சி, முன்னேற்றம் இதனால் தான் அணுகுண்டு வீசப்பட்டும் கூட அன்னிய நாட்டு உற்பத்தியோடு போட்டி போட்டு, இன்று வெற்றி பெற்று நிற்கிறது. ஆனால் நாமோ அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பட்டியலில் இருந்து இன்னும் மாறவில்லை. இதற்கெல்லாம் அடிப்படை என்ன தெரியுமா? உலக ஓட்டப்பந்தயத்தில் ஓடநாம் தயாராக இல்லை. அடுத்தவர் பற்றி விமர்சிப்பதென்றால் ஓர் அகராதியே எழுதத் தயாராக இருக்கிறோம்.


இது எமது சந்ததியோடு நின்று விடும் விடயமல்ல. சிறியவர்களிடத்திலும் இந்தப் பலவீனம் வளர்ந்து விட்டது. இறுதியாக ஒன்றைச் சொல்கிறேன்.

'எம்மால் செய்யமுடியாதவொன்றை அடுத்தவன் செய்கின்றான் என்றால், நிச்சயம் அதற்கு தலைவணங்க வேண்டும். அது பற்றி எமக்குக் குறைகூற எமக்கு எந்த அதிகாரமும் இல்லை என்பதை அடிமனதில் வைத்துக் கொள்ளுங்கள்.'

# தவக்கால நற்சிந்தனை

## "உம் உடமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடு". (மத். 19:21)

மோ. தார்சீசியஸ்



கடவுளின் வார்த்தைக்கு எல்லாவற்றிலும் கீழ்ப்படிந்து வந்தான் அந்தப் பணக்கார வாலிபன். ஆயினும் தன் சொத்துக்களை ஏழைகளோடு பகிர்ந்து கொண்டால், ஆண்டவர் தனது ஆசீரையும், நலன்களையும் தன்னோடு பகிர்ந்துகொள்வார் என்பதை முழுமையாய் அறியாதவனாய் இருந்தான். மாதவிடாய் நின்றுபோன சாராளுக்கு ஒரு மகனைக்கொடுத்து, அதே மகனைத் தனக்குப் பலியிட ஆபிரகாமைக் கேட்டபொழுது, ஆபிரகாம் ஆண்டவரோடு எதிர்வாதம் செய்யவில்லை. அதன்படி கீழ்ப்படிந்தார். கீழ்ப்படிதலின் உச்சநிலை இது தான். இதேபோல் இயேசு சொன்னவுடன் அந்தப் பணக்கார வாலிபன் தன் செல்வத்தை ஏழைகளுடன் பகிர்ந்திருந்தால், அவன் மனநிறைவு பெற்றிருக்கலாம். அவன் செல்வம்கூட பெருகியிருக்கும். ஆனால் அவன் அவ ருக்குக் கீழ்ப்படியவில்லை. ஏழைகளுக்குக் கொடுக்கிறவன் ஏழையாய் இரான். எனவே பிறர் வாழ எம்மிடத்தில் உள்ளதைப் பகிர்ந்து கொள்வோம்.

# பீகாரில் முதலமைச்சர் பதவியேற்பதற்கு அமைச்சரவையிலிருந்து பஸ்வான் விலகல்?



(பாட்னா)

பீகார் சட்டசபைத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் ஆட்சி அமைக்கத் தேவையான 122 எம்.எல்.ஏக்கள் ஆதரவு கிடைக்கவில்லை. இதனால் பீகாரில் ஆட்சி அமைப்பது யார் என்பதில் குழப்பம் நீடிக்கிறது.

இதற்கிடையே பீகார் சட்டசபையின் ஆயுட்காலம் முடிவடையும் நிலையில் புதிய ஆட்சி அமையாவிட்டால், அங்கு ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இதைத் தவிர்க்கத் தேர்தலில் அதிக இடங்களில் வெற்றிபெற்ற ராஷ்ட்ரீய ஜனதா தளம் கட்சியை ஆட்சியமைக்க அழைக்கவேண்டும் என்று ஆளுனர் பூட்டாசிங்கிடம் லல்லு பிரசாத், இடைக்கால முதலமைச்சர் ராப்ரி தேவி ஆகியோர் உரிமை கோரியுள்ளனர்.

காங்கிரஸ் - 10, தேசியவாத காங்கிரஸ் - 3, வ.கம்யூனிஸ்ட்டு - 3, பகுஜன் சமாஜ் கட்சி - 2, இ.கம்யூனிஸ்ட் - 1 ஆகிய கட்சிகளும் சேர்ந்து ராஷ்ட்ரீய ஜனதா தளம் கட்சிக்கு (75) மொத்தம் 94 எம்.எல்.ஏக்கள் ஆதரவுதான் உள்ளது. எனவே லல்லு பிரசாத் கட்சியை மீண்டும் ஆட்சியமைக்க அழைப்பு விடுக்கக்கூடாது என்று பாரதீய ஜனதா கூட்டணி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

லல்லுவின் கட்சி ஆட்சிக்கு வரக்கூடாது என்பதை வலியுறுத்தி, ஐக்கிய ஜனதா தளம் - 55, பாரதீய ஜனதா - 37, லோக் ஜனசக்தி (பஸ்வான் கட்சி) - 29, மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் - 7, சமாஜ்வாதிக் கட்சி - 4 ஆகிய கட்சிகள் சார்பில் மொத்தம் 132 எம்.எல்.ஏக்கள் ஆளுநரிடம் கடிதம் கொடுத்துள்ளனர்.

இதையடுத்து புதிய ஆட்சி அமைக்க அழைப்பு விடுப்பதில் ஆளுநர் பூட்டாசிங் நிதானம் காட்டி வருகிறார். ஆட்சி அமைக்கத் தேவையான 122 எம்.எல்.ஏக்களின் பட்டியலை அளிக்கும் கூட்டணியை, ஆட்சியமைக்க அழைப்பது என்று அவர் முடிவு செய்திருக்கிறார்.

இதனால் பீகாரில் ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்தக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதைப் புதிதாகத் தேர்வுசெய்யப்பட்ட எம்.எல்.ஏக்கள் விரும்பவில்லை. புதிய ஆட்சி அமைக்க ராஷ்ட்ரீய ஜனதா தளம் மற்றும் பாரதீய ஜனதாவை விட்டு விலகி இருக்க விரும்பும் பஸ்வானின் உதவியை அவர்கள் நாடினார்கள்.

இதேபோல் சுயேட்சை எம்.எல்.ஏககள் 6 பேர் பஸ்வானையும் ஐக்கிய ஜனதா தளம் தலைவர் நிதிஸ் குமாரையுப் இணைத்து புதிய ஆட்சியமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்த ஆட்சிக்கு பாரதீய ஜனதா ஆதரவு வழங்குமென்று நம்பிக்கை தெரிவித்தனர்.

இதே கருத்தை பஸ்வான் கட்சியைச் சேர்ந்த உயர் வகுப்பு எம்.எல்.ஏக்கள் 20 பேர் ஆரம்பம் முதலே வலியுறுத்தி வருகிறார்கள். இதனால் உடனடியாக முடிவெடுக்க வேண்டிய கட்டாயம் பஸ்வானுக்கு ஏற்பட்டிருக்கிறது. பல்வேறு தரப்பினருடன் ஆலோசனை நடத்திய பிறகு பீகார் முதலமைச்சர் பதவிக்காக மத்திய ஆளுநர் பதவியை இராஜினாமாச் செய்ய பஸ்வான் முடிவெடுத்துள்ளார்.

# ஜோர்தான் வெளியுறவு அமைச்சர் இஸ்ரேல், பலஸ்தீனத்திற்கு விஜயம்!



ஜோர்தான் கைதிகளை விடுதலை செய்வதாக இஸ்ரேல் தெரிவித்தது.

இந்தக் கைதிகள் தமக்கு மிகவும் முக்கியமானவர்கள் எனவும் அவர் கள் அடுத்த மாதமோ அல்லது இந்த மாதமோ விடுதலை செய்வதனை எதிர் பார்த்துக் கொண்டிருப்பதாகவும் முல்கி தெரிவித்தார். அத்துடன் இவர் இன்று சிறைக்கைதிகளையும் சந்தித்துக் கலந்து ரையாடவுள்ளார்.

கடந்த நான்கு வருடங்களின் பின் முதன்முறையாக ஜோர்தான் வெளியுறவுஅமைச்சர் ஹனிமுல்கி, பலஸ்தீனம் மற்றும் இஸ்ரேலுக்கு விஜயங்களை மேற்கொண்டுள்ளார்.

இவ்வாறு சென்ற இவர் மேற்கு கரையிலுள்ள றமலா நகரில் பலஸ்தீன தலைவர் மஃமூட் அப்பாஸுடன் கடந்தமாதம் எகிப்தில் இடம்பெற்ற சமாதான உடன்படிக்கை தொடர்பாக கலந்துரையாடினார்.

இதன்பின்னர் இஸ்ரேல் சென்ற இவர் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் சில்வன் சாலோம் மற்றும் பிரதமர் ஷரோன் ஆகியோருடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலின் போது, இஸ்ரேல் சிறைகளிலுள்ள

இவர் தனது பயணத்தின் இறுதியாக சமாதானமுயற்சி, எல்லைப் பரப்பு, அகதிகள், ஜெருசலேம் மற்றும் நீர் விநியோகம் தொடர்பாக அறிக்கையை வெளியிடுவாரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவரின் பயணத்தை அடுத்து இரண்டு வாரங்களின் பின்னர் ஜோர்தான் தனது தூதுவரை இஸ்ரேலுக்கு அனுப்பவுள்ளது.

இதேவேளை, பலஸ்தீன படையினரில் 1000 பேருக்கு ஜோர்தான் பயிற்சியளிக்குமெனத் தெரிவித்துள்ளமையை பலஸ்தீன தலைவர் மஃமூட் அப்பாஸ் வரவேற்றுள்ளார்.

# இங்கிலாந்தைத் தாக்குவதற்காக 200 அல்கொய்டா உறுப்பினர்கள்!

## எச்சரிக்கிறார் பிரிட்டன் முன்னாள் பொலிஸ் ஆணையாளர்



(பிரிட்டன்)

சுமார் 200 அல்கொய்டா பயங்கரவாதிகள் இங்கிலாந் தைத் தாக்கும் திட்டத்துடன், இங்கிலாந்திற்குள் செயற்பட்டு வருவதாக இங்கிலாந்தின் முன்னாள் பொலிஸ் ஆணையாளர் சேர்.ஜோன் ஸ்ரீவன்ஸ் எச்சரித் துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

ஒசாமா பின்லேடனால் பயிற்சியளிக்கப்பட்ட, அல்கொய்டா அமைப்பின் உறுப்பினர்கள் பலர் இங்கிலாந்தில் பல பகுதிகளிலும் பரவியுள்ளனர். இவர்கள் தொடர்பான நடவடிக்கை எடுக்கத் தவறின் அது அவர்களுக்கு வாய்ப்பாகிவிடும்.

ஆனால் தற்போது ஒரு குழப்பமான சூழல் உள்ள நிலையில் சேர் ஜோனின் இந்த அறிவிப்பு மேலும் குழப்பத்தை ஏற்படுத்துமென லிபரல் ஜனநாயகக் கட்சி தெரிவித்துள்ளது.

இதேவேளை பயங்கரவாதத் தடைச் சட்டம் மக்கள் சபையில் 14 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. அடுத்து இந்தச் சட்டம் பிரபுக்கள் சபைக்கு செல்லவுள்ளது.

உலக நோக்கு

# நோர்வே எண்ணெய்க் கப்பலில் திடீரெனப் பற்றிக் கொண்ட தீ!



நோர்வே கடற்பகுதியில் சென்றுகொண்டிருந்த எண்ணைக் கப்பலொன்று திடீரெனத் தீப்பற்றி எரியத்தொடங்கியதையடுத்து அந்தக் கப்பலிலிருந்த இந்திய மாலுமிகள் உட்பட அனைவரும் எவ்வித உயிர்ச்சேதமுமின்றி நோர்வே கடற்படையினரால் காப்பாற்றப்பட்டனர்.

நோர்வே நாட்டு எண்ணைக் கப்பல் ஜோர்ட் சம்பியன் - 7 லட்சம் தொன் எண்ணையை ஏற்றிக்கொண்டு நோர்வே நாட்டின் சோக்னி கடற்பகுதியில் சென்றுகொண்டிருந்தது. அப்போது அந்த எண்ணைக் கப்பல் திடீரென்று தீப்பிடித்துக்கொண்டதுடன் தரை தட்டி மேலும் நகரமுடியாமல் நின்று விட்டது.

கப்பலில் எரியும் தீயை அணைக்க நோர்வே கடற்படையினர் நீண்ட நேரம் போராடினார்கள். அந்தகப்பலில் 28 மாலுமிகள் இருந்தனர். இதில் பெரும்பாலானவர்கள் இந்தியர்கள். அவர்கள் அனைவரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுவிட்டனர்.

## அமெரிக்கப் படையால் சுட்டுக்கொல்லப்பட்ட

# நிக்கோலனின் உடல் ஈராக்கிலிருந்து இத்தாலிக்குக் கொண்டு செல்லப்பட்டது



ஈராக்கில், அமெரிக்கப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இத்தாலிய இரகசிய சேவைப் பிரிவைச் சேர்ந்த நிக்கோலா கலிபாரியின் (வயது 51) உடல் நேற்றுக்காலை இத்தாலிக்குக் கொண்டு செல்லப்பட்டது.

ஈராக்கிய கிளர்ச்சிவாதிகளால் கடத்தப்பட்ட இத்தாலிய பெண் பத்திரிகையாளரான கியூலியானா சேஜீனா என்பவரது விடுதலை தொடர்பாக கிளர்ச்சிவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக நிக்கோலா ஈராக் சென்றிருந்தார்.

அங்கு அவர் கிளர்ச்சிவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி கியூலியானாவை விடுவித்தார். இதன்பின் இவர்கள் இருவரும் கடந்த வெள்ளிக்கிழமை பாக்தாத் விமான நிலையத்தை நோக்கி காரில் பயணம் மேற்கொண்ட வேளையே, அமெரிக்கப் படையினர் அவர்களது வாகனத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். இதில் நிக்கோலா அந்த இடத்திலேயே கொல்லப்பட, கியூலியானா காயமடைந்தார்.

ஆனாலும் குறித்த கார் சோதனைச் சாவடியை நோக்கி மிக வேகமாக வந்தவேளை, தாம் எச்சரிக்கை சமிக்ஞையைக் காட்டியபோதும், அந்தக் கார் நிற்காமல் சென்றதாலேயே, துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக அமெரிக்கப் படையினர் தெரிவித்தனர்.



ஆனால், தமது கார் வேகமாகச் செல்லவில்லையென்றும் தம்மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் மழைப் பொழிவுகள் போல் இருந்ததாகவும் கியூலியானா தெரிவித்தார்.

அத்துடன் தன்னைப் பாதுகாக்க ஈராக் வந்த நிக்கோலா உயிரிழந்து விட்டார் எனவும் கியூலியானா கவலை தெரிவித்தார்.

# லெபனானிலுள்ள சிரியப் படைகள் படிப்படியாக விலக்கப்படும்!

## சிரிய ஜனாதிபதி ஆசாத் தெரிவிப்பு



லெபனானிலுள்ள தமது படைகள் முதலில் கிழக்குப் பகுதி பெக்கா ஆற்றுப்பள்ளத்தாக்கிற்கு நகர்த்தப்பட்டு அங்கிருந்து சிரியஎல்லைப்பகுதிக்கு மாற்றப்படுவார்களென சிரிய ஜனாதிபதி ஆசாத் அந்த நாட்டு நாடாளுமன்றில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

லெபனானிலுள்ள எமது படையினரை, வேண்டாமென அந்தநாடு தெரிவிக்கும் பட்சத்தில் ஒருநாள் கூட சிரியப் படையினர் அங்கு தங்கமாட்டார்கள். எமது தற்போதைய நிலைப்பாட்டின்படி திட்டமிட்ட ரீதியிலான படிப்படியான படைவிலக்கலே இடம்பெறும். அத்துடன் முற்று முழுதான படைவிலக்கலுக்கு நாம் எதிராளிகள் அல்லர்.

லெபனானின் எதிர்க்கட்சித்தலைவர் ஹரீரி கொல்லப்பட்டமையானது, மிகவும் வெறுக்கத்தக்க ஒரு குற்றச் செயல். அத்துடன் லெபனானதும் - சிரியாவினதும் ஒருமைப்பாடு மற்றும் ஸ்திரத் தன்மைக்கு எதிரானதாகும். எவ்வாறாயினும் இந்தக்கொலையுடன் தொடர்புடையவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள் என ஆசாத் மேலும் தெரிவித்தார்.

எனினும் ஆசாத்தின் இந்த அறிவிப்பு போதுமானதாக இல்லையென அமெரிக்கா தெரிவித்துள்ளது. லெபனானிலிருந்து சிரியப் படைகள் முற்று முழுதாக விலக்கப்படவேண்டுமே தவிர, அரைவாசியாக அல்லவென ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்ததாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிரிய ஜனாதிபதியின் இந்த அறிவிப்பானது சாதகமான ஆரம்பமாகும். ஆனாலும் படைவிலகலுக்கான தெளிவான கால அட்டவணையை சிரியா அறிவிக்க வேண்டுமென லெபனானின் பிரதான எதிர்க்கட்சித் தலைவர் வலிட் ஜிம்பிளாட் தெரிவித்தார்.

சிரியாவின் இந்த நடவடிக்கையானது ஐ.நாவின் தீர்மானங்களிலிருந்து வழுவிச்செல்வதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. சிரியப் படைகள் லெபனானிலிருந்து வெளியேறினால், லெபனானுடன் தாம் பேச்சுக்களை நடத்தவுள்ளதாக இஸ்ரேல் பிரதிப் பிரதமர் சிமோன் பெரஸ் தெரிவித்துள்ளார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அரசின் நடவடிக்கையை விமர்சித்து ஜனாதிபதிக்கு ஜே.வி.பி. கடிதம்!

அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மற்றும் சமாதான முயற்சிகள், தனியார் மயப்படுத்தல் குறித்த நியாயப்பாடுகளை காரசாரமாக விமர்சித்து ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா – இரகசிய கடிதம் ஒன்றை ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பியிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரில்வின் சில்வா அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் –

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசை நிறுவிய பின்னர் ஜே.வி.பி. பற்றி பல விமர்சனங்களை முன்வைத்துள்ளார். கூட்டணி அரசு நிறுவும்போது ஜே.வி.பிக்கு வழங்கிய வாக்குறுதிகள் பலவற்றை மீறியுள்ளார்.

அரசின் சமாதான முயற்சிகள் தனியார் மயப்படுத்தல் பற்றிய நிலைப்பாடுகள் பற்றி இந்தக் கடிதத்தில் காரசாரமாக விமர்சிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மிகவும் இரகசியமான முறையில் ஜே.வி.பியின் செயலாளர் நாயகம் ரில்வின் சில்வாவின் கையொப்பத்துடன் கடந்த வியாழக்கிழமை இந்தக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

# ஆயுதக் கொள்வனவுகளில் ஜனாதிபதியின் ஆலோசகர்!

ஈரான் மற்றும் இஸ்ரேல் நாடுகளுடனான இலங்கை அரசாங்கத்தின் ஆயுதக் கொள்வனவு நடவடிக்கைகளுடன் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சம்பந்தப்பட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியின் ஆலோசகரின் இந்தச் செயற்பாட்டினால் படை அதிகாரிகளின் கடும் வார்த்தைப் பிரயோகத்திற்கும் அவர் ஆளாகியுள்ளார்.

ஈரானில் மிகப் பெரியளவிலான நவீனரக ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்காக படை அதிகாரிகள் தெஹ்ரானுக்கு புறப்பட்டு சென்றவேளை அவர்களுக்கு முன் ஜனாதிபதியின் ஆலோசகர் அங்கு சென்றுள்ளார்.

இவர் அங்கு முதலில் சென்றமை இந்த ஆயுதக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்கேயாகும்.

இதற்கிடையில் ஈரானில் பெற்றுக் கொள்ள முடியாத ஆயுதங்களை இஸ்ரேலிலிருந்து பெற்றுக் கொள்ளும் முயற்சியிலும் இந்த ஆலோசகரே ஈடுபட்டுள்ளார்.

இந்த வகையில் இஸ்ரேலில் ஆயுதக் கொள்வனவினை மேற்கொள்வதற்காக இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட, கிழக்கு மாகாண தளபதி மேஜர் ஜெனரல் காமினி ஹெட்டியாராய்ச்சி, இராணுவ உதவியாளர் கேணல் றுவான் குலதுங்க மற்றும் விசேட அதிரடிப்படைத் தளபதி நிமால் லெகே ஆகியோர் சென்றுள்ளனர். அவர்கள் இஸ்ரேலில் ஆயுதங்களைப் பார்வையிட்டு வருகின்றனர். (தே)

## புல்மோட்டையில் நேற்றும் மறியல்

திருகோணமலை மாவட்டத்தின் வடக்கு எல்லைக் கிராமமான புல்மோட்டையில் நேற்றும் மக்கள் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

புல்மோட்டை மையவாடியில் சடலங்களை இராணுவத்தினர் தோண்டி எடுத்ததைக் கண்டித்து நேற்று முன்தினம் காலை இப்பகுதியில் போராட்டம் தொடங்கியது.

சடலத்தை தோண்டியவர்களைக் கண்டுபிடித்து, சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து மக்களால் போராட்டம் தொடர்ந்து நடத்தப்படுகின்றது.

கடைகள் மூடப்பட்டுள்ளன. வீதிகளின் குறுக்கே ரயர்கள் போடப்பட்டுள்ளன. போக்குவரத்து சேவை பாதிக்கப்பட்டுள்ளது. நிலைமையைச் சமாளிக்க புனர்வாழ்வு திருகோணமலை அபிவிருத்தி அமைச்சர் நஜீப் ஏ.மஜீத் அங்கு சென்று நிலைமைகளை அவதானித்து நள்ளிரவில் திரும்பியிருந்தார். (04)

## யாழ்.குடா...

எனவே, தொடர்ந்தும் மக்களது இயல்பு வாழ்வுக்கு குந்தகமாக இருக்கும் படையினர், மக்கள் குடியிருப்புக்களில் இருந்து வெளியேற வேண்டுமெனக் கோருவதுடன், இராணுவத்தினரால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் கொலைகளையும், அத்துமீறல்களையும் கண்டிக்கும் முகமாக இன்று துக்கதினமாக அனுஷ்டிக்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

துக்கதினத்தை முன்னிட்டு இன்று காலை சகல பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக, தொழில்நுட்பக் கல்லூரி, உயர் தொழில்நுட்ப நிறுவனம், கல்வியியற் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர் கலாசாலை மாணவர்கள், ஏனைய தனியார் கல்வி நிலைய மாணவர்கள் அனைவரும் மற்றும் அரச, அரசசார்பற்ற தனியார் நிறுவன அதிகாரிகள், ஊழியர்கள் அனைவரும் கறுப்புப்பட்டிகளை அணிந்து கடமைகளில் ஈடுபடும்படியும் – வர்த்தக நிலையங்கள், போக்குவரத்து வாகனங்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் அனைத்திலும் கறுப்புக்கொடிகளைப் பறக்க விடும்படியும் வேண்டுகின்றோம்.

மேலும், பகல் 11 மணிக்கு சகல மாணவர்களும் தமது வகுப்புக்களில் எழுந்துநின்று 3 நிமிடம் கொல்லப்பட்ட பாடசாலை மாணவிக்கும், பொதுமகனுக்கும் அகவணக்கம் செலுத்தும்படி வேண்டுகின்றோம்.

அதேவேளை, மக்களின் சகல செயற்பாடுகளும் வழமைபோன்று இடம்பெறும் என்றும், மக்களது இயல்பு வாழ்வுக்கு குந்தகம் ஏற்படுத்தாத வகையில் துக்கதினம் அனுஷ்டிக்கப்படும் என்பதுடன் – வீதித் தடைகளை ஏற்படுத்தல் மற்றும் வீதிகளில் ரயர்களை போட்டு எரிப்பதனை முற்றாகத் தவிர்க்கும்படியும் இந்த அறிக்கையில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# செக்குடியரசு தயாரிப்பு...

விமான ஓடுபாதை என நம்பப்படும் இரணைமடுப் பகுதியில் எடுத்த புகைப்படங்களில் உள்ள விமானங்களை இனங்காண அமெரிக்காவிடம் உதவி கோரப்பட்டதையடுத்து, அதனை ஆய்வுசெய்த அமெரிக்கா அதனை உறுதிப்படுத்தியுள்ளதாக கொழும்பு ஆங்கில வார இதழில் இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது கட்டுரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது –

செக் குடியரசு 1992 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 750 இந்த மாதிரியான விமானங்களை தயாரித்தது.

இந்த விமானம் மணிக்கு 630 நோட்டிக்கல் மைல்ஸ் வேகத்தில் செல்லக் கூடியதுடன், சாதாரணமாக 240 கிலோகிராம் பொருட்களையும் காவிச் செல்லக் கூடியது. எனினும், விமான ஓட்டி ஒருவர் மட்டும் விமானத்தில் இருந்தால் வழமையாகக் கொண்டு செல்லப் படும் பொருட்களின் அளவில் இரு மடங்கைக் கொண்டு செல்லலாம்.

இந்த விமான ஓடுபாதை அமைப்பதற்கு ஏ – 9 வீதி திருத்தமெனக் கூறி சல்லி அநுராதபுரத்திலிருந்து கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதியில் பாதுகாப்பு அமைச்சில் படை உயரதிகாரிகளுக்கான உயர் மட்ட மாநாட்டில் – உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்த கருத்துக்கள் பொருட்படுத்தப்படவில்லை.

விடுதலைப் புலிகளின் விமான ஓடுபாதை மற்றும் விமானங்களைத் தாக்கியழிப்பதற்கான திறனைத் தாம் கொண்டுள்ளதாக இலங்கை விமானப்படை அரசாங்கத்துக்கு தெரிவித்துள்ளது. எனினும், தற்போதுள்ள போர்நிறுத்த உடன்படிக்கையில் இந்த தாக்குதலை நடத்தமுடியாதுள்ளது.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் இந்த விமானப்படை விவகாரம் தொடர்பாக, ஜனாதிபதி சந்திரிகா நோர்வே பிரதமர் பொண்டவிக்கிற்கு அவசர கடிதமொன்றை அனுப்பியுள்ளார். ஜனாதிபதியின் இந்தக் கடிதத்தை வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கடந்த வியாழக்கிழமை நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரிடம் கையளித்தார்.

விடுதலைப் புலிகளிடம் விமானங்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளமையானது – இலங்கையின் வான்பரப்பிற்கு நேரடியான அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாகவும் எனவே, விடுதலைப் புலிகள் விமானப் படை தொடர்பான சகலவற்றையும் கைவிடுவதற்கு நோர்வே உதவி செய்ய வேண்டுமென ஜனாதிபதி தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு மூன்றாண்டுகள் கடந்த நிலையில், ஜனாதிபதி சந்திரிகா மூன்று வெவ்வேறு சம்பவங்கள் தொடர்பாக நோர்வேயிடம் முறையிட்டுள்ளார் என்றும் அவர் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளளார்.

## சுதந்திரக் கட்சியின் விசேட மாநாடு!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் விசேட மாநாடு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் – எதிர்வரும் 11 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

கட்சியின் எதிர்கால நடவடிக்கைகளும் விசேட வேலைத்திட்டங்களும் இந்த மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக கட்சியின் செயலாளர் நாயகம் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (தே)

# தீர்க்கமான முடிவை எடுக்கும்...

இதற்குக் காரணம் தமிழ்மக்கள் கொலைசெய்யப்பட்டதும், சொந்த இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டதும்தான். இவ்வாறான படுகொலைகள் தொடர்ந்தும் இடம்பெற, விடுதலைப் புலிகள் பொறுமை காத்துக்கொண்டிருப்பார்கள் என்பது எதிர்பார்க்கமுடியாத ஒன்று.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு சந்தர்ப்பத்தைத் தெற்கிற்கு வழங்கியிருக்கின்றனர். இந்த நிலையிலிருந்து தமிழ்மக்கள் எப்போது களைத்து, வெறுப்படைந்து உறுதியான முடிவொன்றை எடுக்கின்றார்களோ, அந்தக் கட்டத்தில் விடுதலைப் புலிகள் தீர்க்கமான முடிவொன்றை எடுப்பார்கள். தொடர்ந்து பொறுமை காத்துக்கொண்டிருக்க மாட்டார்கள்.

பொறுமை என்பதற்கு எல்லை உண்டு. மக்கள் இன்று தமது கொந்தளிப்புக்களைக் காட்டத் தொடங்கியிருக்கிறார்கள். இந் தச் சந்தர்ப்பத்தில் – அரச படைகள், ஆயுத அடக்குமுறையை மக்களின் மீது பிரயோகிப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கமுடியாது.

நிச்சயமாக எமது தலைமைப் பீடம் மிக விரைவில் தீர்க்கமான முடிவுவொன்றை எடுக்கும் நிலைக்கு நெருங்கி வந்துகொண்டிருக்கிறது.

தமிழ்மக்கள் – தமது கொந்தளிப்பைக் காட்டுகின்றபோது – அதனை அரசாங்கம் ஆயுதமுனை கொண்டு தடுக்கின்றபோது – தமிழ் மக்களின் பலமும் அதற்கான பதிலைக் கொடுப்பதற்கு தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கிறது.

நிச்சயமாக இராணுவ வன்முறைகளைக் கொண்டு தமிழ் மக்களை ஒடுக்க முடியாது என்ற நிலையிலேயே இலங்கை அரசு பேச்சுவார்த்தைக்கு வந்தது. இந்தக் காலகட்டத்தில் மீண்டும் அவர் தம் தப்பை பழைய நிலைக்கு தள்ளிச் செல்கின்றனர். விடுதலைப் புலிகள் ஒடுக்கப்பட்டு விட்டார்கள் என்று கூறுவதற்கான பதிலை எதிர் காலத்தில்தான் கூறமுடியும்.

தமிழ் மக்களை பலவீனமாகக் கருதிக்கொண்டு ஒடுக்குமுறை ஒன்றைத் திணிப்பார்களேயானால் தமது பலத்தை தமிழ் மக்களே வெளிப்படுத்துவார்கள்.

தென் தமிழீழத்தில் நடைபெறுகின்ற கொலைகளை யார் செய்கின்றார்கள் என்பதை மக்கள் அறிந்துள்ளனர். படையினரின் திட்டமிட்ட செயற்பாட்டின் உதவியுடன் சில கூலிப்படைகளைக் கொண்டு இந்தப் படுகொலைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சிங்கள அரசாங்கம் தமிழ் மக்களுக்கு நீதி வழங்க மறுக்கின்றது என்ற யதார்த்தத்தை சர்வதேசத்திற்கு வலியுறுத்தவிருக்கின்றோம். இனிவரும் காலங்களில் எமது பயணத்தின்போதும் எம்மைச் சந்திப்பவர்களுடனும் இந்த விடயம் தொடர்பாக வலியுறுத்துவோம்.

ஜே.வி.பி என்பது கடந்த தேர்தலுக்கு முன்பும் இனவாதத்தைக் கக்கிக் கொண்டிருந்தது என்பது இலங்கையில் உள்ளவர்களுக்கும் சர்வதேச சமூகத்தினருக்கும் தெரியும். தமிழருக்கெதிரான விரோத நடவடிக்கைகளை தொடர்ச்சியாக ஜே.வி.பி. செய்து வருகின்றது.

அந்த அடிப்படையில் அவர்கள் தொடர்ந்து எதிர்ப்புக் காட்டத்தான் போகின்றார்கள். எப்போதும் நாம் ஒன்றை மறந்துவிடக்கூடாது. ஆட்சியில் இருக்கும் அரசாங்கங்கள் இந்தத் தந்திரோபாயங்களை தொடர்ச்சியாகக் கையாண்டிருக்கிறன.

அதாவது – தமிழ் மக்களுக்கு நீதி வழங்குவது போல ஒரு தோற்றத்தைக் காட்ட, எதிர்க்கட்சியினர் அல்லது சிங்கள இனவாதிகள் அல்லது மதவாதிகள் தமது எதிர்ப்பைக் காட்டுவார்கள். இதனால், ஆட்சியிலுள்ள அரசாங்கம் நீதி வழங் கும் பொறுப்பிலிருந்து சறுக்கிக் கொண்டு போகும். இதுதான் வரலாறாகவுள்ளது.

ஆனால், இன்று ஒரு புதுமையான போக்கு. ஆட்சியில் கூட்டுச் சேர்ந்திருப்பவர்கள் எதிர்ப்பதைக் காரணம் காட்டி, ஆட்சியிலுள்ள அரசாங்கம் சறுக்கிச் செல்கின்றது. எனவே, இங்கு ஒரு அமைதிச் சூழல் ஒன்று கொண்டுவரப்பட வேண்டும் என்றால் தமிழ் மக்களுக்கு நீதியான தீர்வு ஒன்று முன்வைக்கப்பட வேண்டும்.

ஆனால், தமிழ் மக்களை தொடர்ந்து எதிர்க்கும் சக்திகளுடன் கூட்டுச்சேர்ந்து கொண்டு ஆட்சி அமைத்தவர்கள் என்ற வகையில் தமிழ்மக்களுக்கு நீதி வழங்கும் என்ற எண்ணம் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஜே.வி.பி தமிழ் மக்களை எதிர்க்கின்றது என்று கூறுவதை விட இது ஒரு திட்டமிட்ட செயல் என்றே கூறவேண்டும்.

கட்சிகளில் இருப்பவர்கள் இப்போது மட்டுமல்ல கடந்த காலங்களிலும் முரண்பட்டுக் கொண்டுதான் இருந்தார்கள். கட்சியை விட்டு வெளியேறவில்லை. உண்மையில் முரண்பாடு என்ற தோற்றம் ஒன்றினையே இவர்கள் காட்டுகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மலையகக் கட்சிகள், முஸ்லிம் கட்சிகள் ஆகியன சமாதான முன்னெடுப்புகளுக்கு ஆதரவுதருகின்றநிலையில், அதனை ஜனாதிபதியின் அரசாங்கம் பயன்படுத்தவில்லை. ஜே.வி.பியினரை அரசாங்கம் பற்றிப் பிடித்துக் கொண்டிருப்பதனால் ஒரு தீர்வுக்கு வரமுடியாது. எம்மைப் பொறுத்தவரை அரசாங்கம் ஜே.வி.பியினரை எதிர்த்துக் கொண்டு தமிழ் மக்களுக்கு தீர்வொன்றைத் தரும் நிலைப்பாட்டில் இல்லை. இவ்வாறான எண்ணம் ஒன்று இருந்தால் அவர்கள் தமக்குக் கிடைத்த பல சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தியிருக்க முடியும்.

இனவாத அரசாங்க திட்டமிட்ட செயற்பாடுகளை அரங்கேற்றுவது ஜே.வி.பியாகவே இருக்கின்றது. பல வருடங்களாக தமிழர் தாயகப் பிரதேசம் ஒடுக்குமுறைகளுக்கும், ஆக்கிரமிப்பிற்கும் உள்ளாக்கப்பட்டு பல்லாயிரம் ஆண்டுகளாக தமிழ்மக்கள் வாழ்ந்த இடங்களிலிருந்து அவர்கள் வெளியேற்றப்பட்டு பலாத்கார சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டதும் எங்களுடைய போராட்டத்தின் மிக முக்கியமான அங்கமாக இருக்கிறது.

எனவே, சிங்கள பேரினவாதிகள் இதற்கு முன்னர் மேற்கொண்ட செயற்பாடுகளையே தொடர்ச்சியாக ஏதோ ஒருவிதத்தில் மேற்கொணடு வருகின்றனர். திருகோணமலையில் பொலிஸ், இராணுவம் என்பவற்றின் உதவியுடன்தான் ஜே.வி.பியினர் தமது குடியேற்ற முயற்சிகளை மேற்கொண்டனர்.

ஆனால், மக்களின் கடுமையான எதிர்ப்பின் காரணமாகத்தான் அவர்கள் தற்காலிகமாக பின்வாங்கியிருக்கின்றார்கள் எனக் கருதுகின்றேன்.

இனவாதத்தில் ஜே.வி.பி மட்டுமல்ல – இலங்கை அரசாங்கமும் அதற்கு பின்னால் இருந்து செயற்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

## சண்டைக்கு...

வாறு தெரிவித்தார்.

அண்மைக்காலச் சம்பவங்கள் – விடுதலைப் புலிகளின் பொறுமையை உச்ச அளவில் பாதித்துள்ளன. இதனால் ஏற்படப்போகும் பின்விளைவுகளை அரசும் அதன் படைத்தரப்புமே ஏற்கவேண்டும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

## ஆயுதக்...

சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிதாரிகளின் தாக்குதலுக்கு இலக்கான மூன்றாவது வீட்டில் கொல்லப்பட்டவர் அந்த ஊரைச் சேர்ந்த விஜயசூரிய என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான அவரது இரண்டரை வயதுக் குழந்தை உட்பட இரண்டு பிள்ளைகளும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கு இரவு ரயில் அவ்வழியாகச் சென்றுகொண்டிருந்த நேரம் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதால் வெடிச் சத்தம் எதுவும் தங்களுக்குக் கேட்கவில்லையென கிராமவாசிகள் கூறினர்.

இந்தச் சம்பவத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லையென வெலிக்கந்த பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை – செவனப்பிட்டிய பகுதியில் நேற்றுமுன்தினம் காலை முதல் மாலைவரை படையினர் பாரிய தேடுதல் வேட்டை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.03.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தர) ப் பரீட்சை 2005 ஏப்ரல்
# GeneralCertificate of Education (Advanced Level) Examination, April 2005

# GENERAL ENGLISH
# MODEL EXAMINATION PAPER - I

## GRAMMAR

(I) Select the Most appropriate word and then Fill in the blanks.

(1) The price of essential goods ...................... risen sky high (has/is having/had/have)

(2) The teacher along with the students ...................... present in the fair (was/were/been/has been)

(3) Many a scholar ...................... won glory (was/have/has/being)

(4) Neither pride nor prejudice...................... a saintly person (affects/affect/affecting/affection)

(5) Bread and butter ...................... Gowri's Favourite Food. (is/are/were/would have been)

(6) The Mangoes Mother brought ...................... sour (are tasting/were tasted/taste/tasted)

(7) These books are yours and those are ...................... . (themselves/theirs/their/they're)

(8) There are seven days in ...................... week. (the/a/an/of)

(9) I am sick ...................... learning english. (of/with/by/in)

(10) There are not ...................... marbles in the bottle. (some/a few/any/a little)

(11) which is ...................... highest mountain in the world. (the/a/an/of)

(12) I don't have ...................... a read coin. (ever/ever since/even/any)

(13) My father hasbeen working as a supervisor at the Marine Security Service ...................... thirty years. (for/from/since/nearly)

(14) There ...................... some coconut oil in the plastic Container. (are/some/is/were)

(15) The house, with all its Cotents, ...................... burnt into dust. (was/were/are/have been)

## II. Reading Comprehension.

Read the Following passage and answer the questions that Follow:

In their search for Venision the hunting party moved forward till Martin, who was in advance made a signal to those who followed that the deer were in sight. After a moment, or two reconnoitring he informed them that there were twelve or thirteen, deer scraping up the snow about a hundred - yards ahead. They crept forward; Malachi told each of them which animal to fire at, and they fired nearly simultaneously. Three of the beasts fell, two others were wounded, the rest of the herd bounded off like the wind.

Alfred had fired at a fine buck. wich stood apart from the rest, and the animal was badly wounded, and Alfred saw it flounder into a thicket. They all ran up to where the dead animals lay, and as son as they reloaded their rifles Alfred and Martin went on the track of the one which was badly wounded. They had forced their way through the thicket for abouth fifty yards, quided by the track of the animal, when they started back to the loud growl of some beast.

Alfred saw that a puma had taken possession of the deer and was lying over the Carcass. He levelled his rifle and fired; the beast, although badly wounded, immediately sprang at him and seized him by the shoulder. Alfred was sinking under the animal's weight and from the pain he was suffering when Martin Came to his rescue and put his rifle bull through the head of the beast which fell dead.

(Adapted from the settlers in Canada by Capt, Marryat)

Answer the following questions briefly in your own words as far as possible :

(1) How close did Martin sight the animal?

(2) Why do you think the deer were Scraping up the snow?

(3) Was the deer at which Alfred shot at a male or a Female?

(4) What happened to it?

(5) Give two reasons why Alfred sank to the ground?

(6) How did Martin rescue Alfred?

(7) what would have happened to Alfred if Martin had not rescue him?

(8) Suggest an apt title for the above Passage?

(9) Howmany deer did Alfred notice there?

(10) Howmany deer were injured when they Fired?

II. Find a word from the passage equivalent in meaning to the following :

(1) at the same time : ......................................

(2) a male deer : ......................................

(3) Making a preliminary survey of an area : ......................................

(4) dead body of an animal : ......................................

(5) A dense group of bushes or trees : ......................................

III. Underline the Correct Answer :

(1) The deer Alfred shot at (escaped un hurt/escaped with slight injuries/died of injuries)

(2) The hunters fired at the deer (from time to time/almost the same time/at different times)

(3) The rest of the herd bounded off 'like' the wind. The word 'like' is used as (verb/simile/noun/adjective)

(4) 'Puma' means (a large antelop/a type of deer living in dense forest/ a large brown American animal of the Cat family)

(5) 'venison' means (a poisonous substance/flesh of a deer/horn of a clear)

**03. Summarising :**

**Read the following text and then Summarise it one third of the Original Lenth.**

It is very easy to acquire bad habits, Such as eating too many sweets or too much food or drinking too much fluid of any kind, or smoking. The more we do a thing, the more we tend to like doing it; and, if we do not Continue to do it, we feel unhappy. This is called the force of habit, and the force of habit should be fought against.

Things which may be very god when only done from time to time, tend to become very harmful when done too often and too much. This applise even to such good things as work or rest. some people from a bad habit of working too much, and others of idling too much. This wise man alwayd remembers that this is ture about himself , 'I am now become idle', or 'I like too many sweets' or 'I smoke too much' and 'adds, 'I will get myself out of this bad habit at once'.

One of the Mostly spread of bad habits is the use of tobacoo, Tobacoo is now smoked or chewed by men, often by women, and even by children, al most all over the world. It was brought into Europe from America by Sir hlalter Raliegh, four Centuries ago, and has thence spread every where, I very much doubt whether there is any good in the habit, even when tobacoo is not used to excess; and it is extremely difficult to get of the habit when it has been formed.

**04. Vocabulary :** Underline the Correct word.

(1) The wristwatch you last week was expensive :
(Cheap/Vague/dearly/imitation)

(2) He had a penchant for pottery from his early childhood.
(essentials/disgust/liking/engrave)

(3) You will embark on a health and exercise programme :
(discard/engage/jettison/become weak and infirm)

(4) We also have a jumbo steel Cabinet.
(made of brass/elaborate/unusually large)

(5) It hasbeen raining cats and dogs since early morning.
(heavily/intermittently/at regular interval)

(6) The son of the next door aunty is a bad hat.
(a person of bad character/Very industrious/Very stylish)

(7) The school and its permises should be kept spick and span.
(in disarray/look smart/clean and tidy)

(8) The intruders were lying-in-wait.
(waiting for dinner/ready to assault/fed up of waiting)

(9) Sales of shopping bags are at a stand still.
(stopped temporarily/Completely stopped/become motionless)

(10) Due to civil war, the economy of our Country grows at snail's pace (by degrees/by leaps and bounds/at an alarming rate)

(11) He has a bath once a blue moon.
(twice a day/regularly/very rerely)

(12) Everyone, great and small is affected by the civil war.
(all communities/people irrespective of the sexes/rich and poor)

(13) He drove full tilt into the lamp post.
(with great speed/under the influence of alcohol/very carefully)

(14) The Marketing department was in complete disarray untill the new manager took charge of it. (dispersed of/revived/took control of)

(15) The attempt to get the stolen bicycle was a wild goose chase.
(timely action/odd thing/useless search/recovered)

05. Use five of the following words in sentences that bring out their meaning. you may use the verbs in any tense.
Words :

*[jubilant / unprecedented / teemwith / occasionally / accumulate / liable to / obviously / considerably / pay off / evident]*

06. Writing :

Suppose you are the head prefect of your school. Prepare a 'Notice' asking students to Contribute generously to raise fund for the Tsunami - Stricken people in our country.

07. Imagine you have gone to England for prosecuting your higer studies. write a letter to youe younger brother who is in kandy about it write in about 125 words.

08. Read the following news items and write in the space below, each, the meaning of the word underlined.

(A) A NOVEL WAY TO LEARN ENGLISH

Teaching young Children to learn a new language can be a daunting task for any teacher. The biggest challenge is first to be able to win the learner's attention. and then to sustain it.

(B) SHELL GAS AWAITS APPROVAL FOR PRICE HIKE.
Shell gas has Sought another price hike and is awaiting approval from the Consumer Affairs Authority, its Managing director/ Country chaiman Hassan Madani Said.

(C) GOVERNMENT EMBARKS ON GIANT PROJECT
The government is embarking on a gigantic project to build around 20,000 to 30,000 temporary houses for displaced persons affected by Tsunami disaster, a spokesman for the Commissioner General for Essential services told the sunday Observer.

**Mr. Sivagnanasundaram Suthagar.**
*(J/Uduppiddi American Mission College, V.V.T.)*